REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER


T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 21 | சுன்னாகம், விரோதி தை உக, 11-2-51 ஞாயிறு (காந்தி ஆண்டு 82) | இதழ் 28

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்



திறமான
கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள்
மேசை, 'பொக்கெற்' கடிகாரங்கள்
விற்பனைக்கிருக்கின்றன

N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

# இந்தியர் உரிமை

## 'கதர் மலர்' ஆசிரியர் கருத்து

### ஒன்றுமறியாத ஏழைத் தொழிலாளர் கதி

இலங்கையிலுள்ள இந்தியர்களது உரிமைபற்றிச் சமீபத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் நிர்வாகசபையிற் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இந்தியாவிலுள்ள பத்திரிகைகள் பல இது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின்போக்கைக் கண்டித்துள்ளன. சென்னை ஹிந்துப்பத்திரிகை மிகவும் நிதானமாக இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியர் பிரஜா உரிமைபற்றிச் சில யோசனைகளைக் கூறியிருக்கின்றது.

இந்நிலையில் காந்திஜியின் தத்துவ ரீதியான ஓர் அபிப்பிராயம் ஈழகேசரிக்குக் கிடைத்துள்ளது. கதர்மலர் ஆசிரியரான ஸ்ரீ தா. இராமசாமி அவர்களின் கருத்தையே இங்கு பிரசுரிக்கின்றோம்.

சமீபத்தில் மதுரையில் நடைபெற்ற கதர் உபகரண மகாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து, காந்தி சேவா சங்கத்துச் செயலாளரான ஸ்ரீ சி. க. வேலாயுதபிள்ளை சென்றிருந்தார். அவரே ஸ்ரீ இராமசாமி அவர்களின் கருத்தை எமக்கு எழுதி அனுப்பியுள்ளார்.

இலங்கை இந்தியர் உரிமைகள் பற்றி ஸ்ரீ இராமசாமி அவர்களுடன் பேசியபோது அவர் கூறியதன் சாரம் வருமாறு:

தமிழ் நாட்டில் உள்ள வியாபாரிமாரும் வேறு தனவந்தர்களும் இலங்கை சென்று பல வழிகளிலும் பணத்தை வகுவித்தார்கள். வட்டிக்குமேல் வட்டி போட்டுச் சுரண்டினார்கள். ஆயிரக்கணக்காக இலட்சக்கணக்காகப் பணந்திரட்டினார்கள். இப் பணத்திலிருந்து ஒரு பகுதியைக்கொண்டு இலங்கையில் ஏதாவது உபயோகமுள்ள தர்மஸ்தாபனங்களை அமைத்தார்களா? பள்ளிக்கூடங்களைக் கல்வி நிலை

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



மந்திரி பண்டாரநாயகா அவர்கள் நாட்டிலே கிளப்பி விட்டிருக்கும் மத சம்பந்தமான கூக்குரல் லண்டனுக்கும் எட்டியிருக்கின்றது. சமயப் போர்வைக்குள் புகுந்துள்ள அரசியற் கள்வன் என்ற தோரணையில் அங்குள்ள பத்திரிகை ஒன்று மந்திரியைக் கண்டித்திருக்கின்றது. பௌத்த மதம் அரசாங்க மதமாகவேண்டுமென்பது இவரது கட்சி.

மாதம்பையில்நடைபெறவிருந்த சிங்கள மகாசபையின் மகாநாடு பின்போடப்பட்டிருக்கின்றது.

# ஆசிரியர் பயிற்சி

## மகரகமத்தில் 162 பேர்

### குண்டசாலைப் பெண்களுக்கு ஒரு வருடம்

நமது கல்வி நிருபர்

இலங்கையில் ஆசிரியர்களின் தட்டுப்பாடு இந் நாட்களில் அதிகம். இக் குறையை நீக்குவதற்காக அரசினர், ஆசிரியர்களை உற்பத்தி செய்வதில் மும்முரமாக முயற்சி செய்து வருகின்றனர்.

மகரகமத்திலுள்ள அரசினர் ஆசிரிய கலாசாலை இவ்வாண்டு 162 பேரைப் பயிற்சிக்கெனப் பரீட்சை வைத்துத் தெரிவு செய்துள்ளது. இப்பரீட்சைக்கு 4000 பேர் சென்ற செப்டம்பரிற் பிரவேசித்தனர்.

இம்முறை வெற்றிபெற்றவர்களில் மூன்றிலொரு பகுதிக்கு மேலானோர் பெண்களாவர். சென்ற ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற பிரவேசப் பரீட்சைக்குப் பெண்கள் அனுமதிக்கப்படாதபடியால் இவ்வருடம் அவர்களின் தொகை அதிகரித்துள்ளது. சென்ற வருடத்தில் 98 ஆண்கள் பயிற்சிக்கெனத் தெரிந்து எடுக்கப்பட்டனர்.

இவ்வருடம் நடைபெற்ற பிரவேசப் பரீட்சையில் வெற்றிபெற்ற பெண்மணிகளுள் ஐவர் குண்டசாலை மகளிர் விவசாயப் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் ஏற்கனவே ஒருவருடப் பயிற்சி பெற்றுள்ள ஆசிரிய வகுப்பிற் சேர்க்கப்படுவார்கள். எனவே, இவர்கள் ஒரு வருடப் பயிற்சியே பெறுவார்கள். இவர்கள் பெறும் ஆசிரிய தராதரபத்திரம் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்களின் பத்திரத்துக்கு இணையானதாக இருக்கும்.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# இந்து ஹரிஜனர்

## மதம் மாறலாகாது

இந்தியாவின் தொழில் மந்திரி ஸ்ரீ ஜகஜீவன்ராம் ஹைதராபாத் ஹரிஜன வகுப்பினர் மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில் ஹரிஜனங்கள் பிறமதங்களைத் தழுவுவதைத் தாம் ஆட்சேபிப்பதாகக் கூறினர். அவர் பேசியதாவது:

"ஹரிஜனங்கள் நல்ல இந்துக்கள். பல நூறு வருடகாலமாக இந்துமதக் கொடுமைகளும் தீண்டாமையும் இருந்தும், அவர்கள் இன்னும் இந்துமதத்திலேயே இருந்துவருகிறார்கள்.

"நாம் பெற்ற சுதந்திரத்தைப் பாதுகாக்க இந்திய தேசிய காங்கிரசையும், தாழ்த்தப்பட்டவர் வகுப்புச் சங்கத்தையும் பலப்படுத்தவேண்டும்."

பம்பாய் மந்திரி ஸ்ரீ ஜி. டி. தபலே தாழ்த்தப் பட்டவகுப்பினர் மகாநாட்டிக் தலைமைவகித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"அசிங்கமான பழக்கவழக்கங்களை நாம் கைவிடவேண்டும். தோட்டித் தொழில், தோல்களைப் பதனிடுதல் முதலியவற்றை நவீன சாதனங்களின் உதவிகொண்டு செய்யவேண்டும். அப்படி மாறுதல்கள் செய்துகொண்டால் ஹரிஜனங்கள் வாழ்க்கை நிலையிலும் மாறுதல் ஏற்படும்.

"உங்கள் குழந்தைகளைத் தோட்டித் தொழிலுக்கே போகுமாறு நிர்ப்பந்திக்காதீர்கள். மற்றவர்களும் இத்தொழிலைச் செய்துபார்க்கட்டுமே. அப்பொழுதுதான் இத்தொழிலைப்பற்றி அவர்கள் அறிந்துகொள்ளமுடியும். உங்கள் குழந்தைகளைக் கைத்தொழில், வாணிபம் முதலிய துறைகளிற் பழக்குங்கள்.

"சென்றவைகளை மறந்து வருங்காலத்துக்காக நம்பிக்கையுடன் வேலைசெய்யுங்கள்."

# வடபகுதிக்கு வானொலி?

## -உள்ளதையுங் கெடுத்தது மழை-

நமது நிருபர் கடிதம்

யாழ்ப்பாணம், 9-2-51

உள்ளதையுங் கெடுத்தான் கொள்ளிக்கண்ணன் என்ற பிரகாரம் நேற்றுப் பொழிந்த மழையானது விளைந்த வயல்களுக்குங் கொள்ளி சொருகிவிட்டது!

மழையில்லாத மாரியை அனுபவித்த யாழ்ப்பாணத்தில் ஏதோ அங்குமிங்குமாகச் சில வயல்கள் கதிர்கண்டு மகிழ்ந்தன. அதையும் நாசமாக்கிவிட்டது இந்த மழை! போதாக்குறைக்குப் புகையிலைக்கன்றுகளையுந் தலைசாயச் செய்துவிட்டது

தைமாதம் முடிவடைவதற்கு முன்னர் கலியாணஞ் செய்துகொள்ளுவதற்கெனக் கொழும்பு போன்ற பிறவிடங்களிலிருந்து வந்த மாப்பிள்ளைமாருக்கும், பெண்களுக்கும் இந்த மழை வில்லங்கத்தை உண்டாக்கிவிட்டது. பணத்தையும் நேரத்தையும் விரயஞ்செய்து சிங்காரப்பந்தர்களை அமைத்துச் சீர் சிறப்பைக்கண்டு மகிழ எண்ணியிருந்தவர்களுக்கு வியாழனன்று பெய்த மழை மிகுந்த ஏமாற்றத்தை உண்டாக்கியிருக்கின்றது.



கர்நாடக சங்கீதக்கலையின் சற்குருவான தியாகராஜக் கவிகளின் திருவிழா இவ்வாண்டு திருவையாற்றில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கட்டுரை 8-ம் பக்கம் பார்க்கவும்.

### யாழ்ப்பாணம் வானொலி

யாழ்ப்பாணத்துக்குப் புறம்பானதோர் வானொலிநிலையம் அமைக்கவேண்டுமென்ற அபிப்பிராயம் பலவருடகாலமாகக் கலைப் பிரியர்களிடையே நிலவி வருகின்றது. அரசாங்கத்தின் அனுமதியுடன் பிரத்தியேகமானதோர் வானொலி நிலையத்தை அமைத்தால் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் சகல வசதிகளுடனும் சுவையான பல நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி மக்களை மகிழ்விக்க ஏதுவாகும். கொழும்பு ரேடியோ கருங்குயிலாகக் கூவினாலென்ன, நனைந்த காகமாகக் கரைந்தாலென்ன அதைக் கேட்பவர்ஒருவருமில்லை. திருச்சி வானொலியைத்தான் தினந்தோறும் முறுக்கிவிட்டு நன்கு அனுபவிக்கின்றனர்.

கொழும்பு வானொலியில் ஒலிபரப்பப்படும் ஒருசில தமிழ்ப் பேச்சுக்கள் கவைக்கும் உதவாதனவாக இருக்கின்றன. ஒருவரும் அறியாத புதிய புதிய பேர்வழிகள் உப்புச்சப்பற்றபேச்சுக்களை வானொலியின் 'சிறுவாய்' முன்னிலிருந்து ஒப்படைத்துவிட்டுக் கிளம்பிவிடுகின்றனர். கொழும்புப்பட்டினத்தை அறியாதவர்களுக்கு இலங்கை வானொலி நிலையம் இப்படியான சந்தர்ப்பங்களை வழங்குகின்றதுபோலும்.

இத்தகைய சீர்கேடுகளை அகற்றுவதற்குச் சிறந்த வழி யாதெனில் யாழ்ப்பாணத்துக்கெனப் புறம்பானதோர் நிலையத்தை அமைப்பதேயாகும். யாழ்ப்பாணத் தொகுதிகளின் பிரதிநிதிகள்சபைப் பிரதிநிதிகள் இதுவிஷயத்தில் உழைப்பது அவசியம். இதில் வெற்றிபெற்றால் அவர்கள் வானொலிநிலையத்தில் இருந்துகொண்டே தேர்தற் பிரசாரங்களையுஞ் சொற்ப செலவுடன் செய்துகொள்ளலாம்!

### சுதந்திரவிழா

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுஞ் சுதந்திரவிழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. இம்முறை யாழ்ப்பாணத்துப் புகையிரத நிலையம் மகர தோரணங்களுடனும் மாலைகளுடனும் அந்நிய நாட்டுக் கொடிகளுடனும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. "மன்னர் நீடுவாழ்க" என்ற ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்ட கொடியொன்று, கட்டட முகப்பிற் பட்டொளி வீசிப்பறந்த காட்சி எத்தனையோ பல சந்தேகங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் கிளப்பிவைத்தது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

## ஊர் வதந்தி

### கொண்டோடி

● இலவசக்கல்வி தேசத்துக்குக் கிடைத்தற்கரிய ஒரு வரப்பிரசாதம் எனப் பலர் எண்ணினராம்.

✲ தேசமக்களும் மனக்கோட்டைகட்டி எழுப்பி மனப்பூர்வமாகத்தான் வரவேற்ருர்களாம்.

✲ இல்வசக்கல்வித் திட்டத்தை வகுத்த மந்திரியாரும் பெரிய திட்டங்களைத்தான் போட்டிருந்தாராம்.

✲ இந்த மந்திரியார் பெரிய தேசிய நோக்குடனேதான் இதனை வகுத்திருந்தாராம்.

✲ இவர் முதன் முதலாக அரசாங்கசபையில் இத்திட்டத்தைக் கொண்டுவந்தபோது பலர் திரு திருவென்று விழித்தனராம்.

✲ வித்தியா வியாபாரஞ் செய்யும் கல்லூரிகளும் சபைகளும் இதனை எதிர்க்கப் பகீரதப் பிரயத்தனஞ் செய்தனவாம்.

✲ இப்படியாக எதிர்த்தவர்களுள் இப்போது பாராளுமன்ற அங்கத்தவர்களாகவும், மந்திரிகளாகவும் இருக்கும் பலராம்.

✲ அப்போது இவர்கள் எதிர்த்து நின்றதற்கும் பாராளுமன்றத் தேர்தல்தான் காரணமாம்.

✲ எம். பி. களாவதற்கு ஒரு சில சமய ஸ்தாபனங்களின் பந்துக் கட்டான கருணையை வேண்டி நின்றனராம்.

✲ என்ருலும் பழைய மந்திரியார் தாம்எடுத்தகாரியத்தை நிறைவேற்றியேவிட்டாராம்

✲ இதன் பயனுகத்தான் இம் மந்திரியாருக்கு எம். பி. ஆகும் பாக்கியம் கிட்டவில்லையாம்.

✲ இதனுல் ஒருவர் வகுத்திருந்த இத் திட்டம் இன்னெருவரால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதாம்.

✲ இவருக்கு அநுசரணையாக இத் திட்டத்தையே விரும்பாத பழைய சகாக்களும் சேர்ந்து கொண்டார்களாம்.

✲ இப்போது இவர்கள் நினைத்தபடியேதான் இலவசக் கல்வி நாட்டில் வழங்கப்படுகின்றதாம்.

● இப்போதைய இலவசக் கல்வி 'கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட' மாதிரியாகத்தா னிருக்கின்றதாம்.

✲ இலவசக் கல்வியென்ருல் பணமில்லாமல் எல்லாரும் ஆங்கிலம் கற்கலாம் என்றயாவரினதும் கருத்தாம்.

✲ எல்லோரும் ஆங்கிலங் கற்றுவிட்டால் அரசாங்க உத்தியோகம் காலடியின் வந்து தவங்கிடக்குமென்ற எண்ணமாம்.

✲ இப்படியாக எல்லாப் பெற்ருேரும் எண்ணி ஆங்கிலக் கல்லூரிகளுக்கு மக்களுடன் படையெடுக்கின்றனராம்.

✲ இப் படையெடுப்பினுல் சிறுத்திருந்த ஆங்கிலப் பாடசாலைகள் பெருத்துக் கல்லூரிகளாகிவிட்டனவாம்

✲ இலவசக்கல்வித் திட்டத்தில் சேராதிருந்த கல்லூரிகள் நானே, நீயோ என்று முந்திக்கொண்டு சேர்கின்றனவாம்.

✲ ஈயடித் துக்கொண்டிருந்த கல்லூரிகள் எல்லாம், இதனுல் ஈயிருக்கும் இடமுமில்லை எனக் கையை விரிக்கின்றனவாம்.

✲ அதுமாத்திரமல்லவாம்: பண வருவாய் முன்னெரு போதுமில்லாத முறையிற் கேளாமலே வந்து குவிகின்றதாம்.

✲ இது இப்படியாக, தேசிய பாஷைகளின்பாடு சுதந்திர இலங்கையில் இருந்த இடம் தெரியாது மறையப் போகின்றதாம்.

✲ சுயபாஷா வித்தியசாலைகளில் மாணவர்கள் படிப்பதற்கே அவசியமில்லையாம்.

✲ ஆங்கிலக் கல்லூரிகளிலேயே இவர்களுக்கு இடமளிக்கப்படுகின்றதாம்.

✲ அப்படியானுல் இனி சுயபாஷா ஆசிரியர்கள் பாடும் திண்டாட்டத்திலே தான் வருமாம்.

✲ ஆனுல் ஒன்றை மாத்திரம் திடமாகக் கூறி விடலாமாம்.

✲ இலவசக்கல்வித்திட்டத்தை வகுத்த பழைய மந்திரி கன்னங்கராவாம்.

✲ இம்மாதிரி உளிப்பிடியாகத் தமது திட்டம் வரும் என்று அவர் கனவிலும் நினைந்திருக்க மாட்டாராம்.

✲ இத்தனைக்கும் எங்கள் மந்திரிசபையினதும், சில சுயநல வித்தியாவியாபாரிகளினதும் மூளைவன்மையே காரணமாம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 5711**

கொக்குவில் கிழக்கு
**சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு**
வழக்காளி

கொக்குவில் கிழக்கு
**செல்லப்பா விசுவலிங்கம்**
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 5711-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1 951-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 10-ந் திகதி (10-3-51) சனிக்கிழமை முற்பகல் $9\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1203-29-ம், இதில் ரூபாய் 1000/- க்கு 12-7-49 திகதி தொடக்கம் 16-8-49 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 153-17 சதம்.

**காணியின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று ஆனைக்கோட்டையிறை "ஊமை காடு" நிலைப்பரப்பு மூன்றேமுக்கால் ($3\frac{3}{4}$-ம்) எல்லை கிழக்கு செல்லையா பெண் பொன்னம்மாவின் ஆதனம். வடக்கு ருேட்டு. மேற்கு செல்லப்பா விசுவலிங்கத்தின் ஆதனம். தெற்கு கந்தையா பெண் பாக்கியத்தின் ஆதனம். இதடங்கலும்.

முற்பதிவு E 252/153
சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 27-1-51 [4237]


சகல பயிர்களுக்கு
CCC பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில்
40 வருடகால அனுபவத்தின் பயனுக

நாங்கள்
C C C
கலவைப்பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிருேம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசீலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி,
லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The
Colombo
Commercial
Company,
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.
[4223]

கதைப் போக்கிலும் கருத்தினழகிலும் சொற் சேர்க்கையிலும் கம்பரும் வான்மீகியும் ஒருவரை யொருவர் நிகர்க்கின்றனர்.

கம்பரும் வான்மீகியும்

# கிட்கிந்தைப் படலம்

## சில அழகிய அம்சங்கள்

**கிட்கிந்தா காண்டத்தின்** அமைப்பைப நோக்குமிடத்துச் சில அழகிய அம்சங்கள் காணக் கிடக்கின்றன. இரு புலவர்களும் நாடக முறையைக் கையாண்டிருக்கிறார்கள். அதுதான் இக் காண்டத்தின் கதைப் போக்கை இனிமையாக்குகிறது; கதா பாத்திரங்களையும் உயிருள்ளவைகளாகச் செய்கின்றது.

வான்மீகி 68 சர்க்கங்களிற் கூறியுள்ள கிட்கிந்தா காண்ட நிகழ்ச்சிகளைக் கம்பர் 14 படலங்களில் தொகுத்துள்ளார். இவற்றுள் முதலேழு படலங்கள் சீதையைத் தேடுதல் என்ற முக்கியமான கதையின் பூர்வாங்கமாக இருக்கின்றன. பிந்திய ஏழு படலங்கள் சீதையைத் தேடும் பிரயத்தனங்களைக் கூறுகின்றன. பிந்திய ஏழின் முதற்படலம் கிட்கிந்தைப் படலம்.

முதலேழு படலங்களில் மூன்று படலங்கள் பிரிவாற்றுமையால் வருந்திய இராமனது நிலையை வருணிக்கின்றன. பம்பைப் படலத்தில் இராமன் பட்ட துயரத்தை யகற்றுவதற்கு இலக்குவன் பட்ட பாடு இம்மட்டல்ல. கலன்காண் படலத்தில் இராமன் கலங்கியபோது சுக்கிரீவன் அரும் பாடுபட்டுத் தேற்றினுன். கார்காலம் வந்தது. இராமனுடைய துயரமும் வந்தது. இப்போது தேற்றுவது இலக்குவன் பொறுப்பாயிற்று. ஏனெனில், சுக்கிரீவன் வானர வரசையேற்றுக் கிட்கிந்தையில் வசிக்கிருன். இராமனும் தம்பியும் பம்பைக் கரையில் ஒரு மலைக்குகையில் கார்காலத்தைக் கழித்து வருகிருர்கள். இப்போதும் இலக்குவன் இராமனைத் தேற்றுகிருன்.

**மாரி கழிந்து கூதிர்காலம்** வருகிறது. சுக்கிரீவன் வரவில்லை. பிரிவாற்றுமையினுலும், சுக்கிரீவன் வரவில்லையேயென்ற கோபத்திறுைலும் இராமன் துடி துடிக்கிருன். அதைக்கண்ட இலக்குவனுக்கும் சுக்கிரீவன்பாற் கோபம் மூளுகிறது. இராமன் கட்டளைப்படி சுக்கிரீவனைப் பார்த்து வரக் கிட்கிந்தை செல்லுகிருன். அங்கு நடந்த சம்பவங்களைக் கூறும் படலம் கிட்கிந்தைப் படலம்.

முதலேழு படலங்களுள் வாலி வதைப் படலம் சிறந்த நாடக அமைப்பைப் பெற்றிருக்கின்றது. பிந்திய ஏழு படலங்களுள் கிட்கிந்தைப் படலம் அதிலுஞ் சிறந்த நாடக அமைப்புடையதாக விளங்குகிறது. முந்திய ஏழு படலங்களில் இராம கோபத்தைப்பற்றி யறிந்தோம். இப் படலத்தில் இலக்குவன் கோபம் எத்தன்மையானது என்று அறிகிருேம்.

இலக்குவனுடைய கோபம் சாதாரணமானதல்ல. அது அறத்திற்காகஎழுகின்றகோபம். (Righteous Indignation) யாராவது அறத்திலின்றும் வழுவினுல் இலக்குவனுக்குக் கோபம் வந்துவிடும். அத்தகைய கோபம் முன்னர் இரு முறை வந்திருக்கிறது. முடியைத் துறந்து கானகத்திற்குச் செல்ல இராமன் நிச்சயித்தபோது இலக்குவனுக்குக் கோபம் உண்டாகிறது. கைகேயியையும், அவள் மகன் பரதனையும், தசரதனையும்,— ஏன் இராமனையுங் கூடத்தான் —இலக்குவன் கோபித்துக் கொள்ளுகிருன். அது முதலாவது தடவை.

**இரண்டாவது தடவை** யெப்பொழுதென்ருல் பஞ்சவடியில். மாரீசன், 'ஹா ஸீதா, ஹா லக்ஷ்மணு!' என்று கதறிக்கொண்டு விழுகிருன். அச் சத்தம் சீதையினுடைய காதில் விழுகிறது. அப்போது இலக்குவனைப் போய்ப் பார்த்து வரும்படி சீதை யேவுகிருள். இலக்குவன் போகாது தயங்கி நிற்கிருன். அதைக் கண்ட சீதை சில கொடிய வார்த்தைகளைக் கூறி இலக்குவனைத் திட்டுகிருள். இலக்குவனுக்குக் கோபம் வருகிறது. அவளைத் தனியே விட்டுச் செல்லுகிருன்.

இந்த இரண்டு இடங்களிலும் இலக்குவனுடைய கோபம் வீணுயிற்று. அயோத்தியில் இராமனுடைய மனவுறுதிக்கு இலக்குவனுடைய கோபம் தோற்றது. பஞ்சவடியில் சீதையினுடைய சாகசத்திற்குத் தோற்றது. இங்கு கிட்கிந்தையில் தாரையின் சொற்சாதுரியத்திற்கு அடங்க வேண்டியதாயிற்று.

இப்படலநிகழ்ச்சிகள் பெரும்பாலும் வான்மீகியைப் பின்பற்றியே யெழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் சிலவிடங்களில் முக்கிய மாறுதல்களும் இருக்கின்றன. உதாரணமாகத் தாரையின் நிலையைக் கூறுமிடத்து இரு புலவர்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றது. வாலி இறந்தபிறகு தாரை சுக்கிரீவனை மணந்து கொண்டதாக அறியக் கிடக்கின்றது வான்மீகியில். ஆனுல் கம்பர் அவ்வாறு சொல்லவில்லை. கைம்பெண் கோலத்துடன் தாரை யிருந்ததாக வருணிக்கிருர்.

மேலும் வேருெரு வித்தியாசம் இருக்கின்றது. இலக்குவனது கோபத்தைத் தணிக்கும்படி தாரையை அனுமன் ஏவினதாகக் கம்பர் கூறுகிருர். வான்மீகியோவெனில், சுக்கிரீவனே தாரையை யேவினதாகச் சொல்லுகிருர். இது முதற்கூறிய வித்தியாசத்தின் பெறுபேறு. எவ்வாறெனின் இலக்குவன் வந்தபோது ருமை, தாரை இவர்கள் புடைசூழச் சுக்கிரீவன் இருந்ததாக வான்மீகி கூறுகிருர். கம்பர் கூற்றின்படி தாரை கைம்பெண் கோலத்துடன் வேறிடத்தில் வசித்து வந்ததால் அனுமன் அவளை யேவுகிருன்.

இவைபோன்ற சில வித்தியாசங்கள் இப்படலத்தில் இருப்பினும், கதைப் போக்கிலும் கருத்தினழகிலும் சொற் சேர்க்கையிலும் கம்பரும் வான்மீகியும் ஒருவரை யொருவர் நிகர்க்கின்றனர்.

— கே. எஸ். கே. —

### சம உரிமையும் கடமையும்

பெண்கள் பதிவிரதைகளாக இருக்கவேண்டுமாயின், புருஷர்களும் ஏக பத்னிவிரதர்களாக இருப்பது அவசியம். பெண்கள் புருஷனுடைய அடிமையல்ல. அவள் அவனுடைய வாழ்க்கைத் துணைவி; அவன் உடம்பில் ஒரு பகுதி; அவன் சிநேகிதி; புருஷனுக்குச் சரிசமமான உரிமைகளை அனுபவிப்பவள்; புருஷனுடைய சகதர்மிணி. அதாவது புருஷன் நடத்தும் தார்மீக வாழ்க்கையில் சம அந்தஸ்து பெற்ற கூட்டாளி. ஆகவே இவ்விருவர்களுக்குள் யாதொரு வித்தியாசமும் கிடையாது. —காந்திஜி

## அமெரிக்காவின் செல்வன்

ஜவஹர்லால் நேரு அமெரிக்காவிற் பேசியதின் கருத்து



[வித்துவான் சு. உமைதாணுபிள்ளை]

(சென்றவாரத் தொடர்ச்சி)

29. சிந்தைக் கினிய மாணிக்கம்
தேடக் கிடையா மாணிக்கம்
இந்த உலகில் எங்கெங்கும்
எழுந்து நின்று ஒளிவிட்டு
எந்த நாளும் உயிரொளியாய்
இன்ப மூட்டும் மணியிருக்க
விந்தைக் கோகினூர் பதித்தமுடி
வீணுய் விளங்குஞ் சின்னமன்ருே.

30, அந்த ரங்க உடன்படியும்
அரசியல் தந்திர பேச்சுகளும்
எந்த நாளும் யுத்தத்தை
இந்த உலகில் எதிர்நோக்கும்
இந்த உலகி னியல்பெல்லாம்
இதயத் திருத்தும் ஏந்தல்நீ
விந்தை யாகக் கையாண்ட
வீரர் களுக்கு விரித்துரைத்தாய்.

31. தேச நேச அரசியலில்
சேவை செய்யும் புதியவழி
"ஆசை நிறைந்த அன்புநெறி
அரிய நெறியது" எனவிளக்கிப்
பேசக் கேட்ட அமெரிக்கர்
பேச்சும் மூச்சும் இல்லாமல்
கூசி ஒன்ருய்ப் பிரமித்துக்
குனிந்து நிற்கும் நிலைகண்டாய்.

32. தாலம் ஆளுந் தலைவர்கள்
சம்பிர தாயத் திற்காக
ஞாலம் அறிய வரவேற்று
நாக ரிகமாய்ப் போற்றிடினும்
சிலஞ் சிறந்த பொதுமக்கள்
செல்வச் சீமான் அறிஞர்கள்
சால சூட்டிய புகழ்மாலைத்
தலைவா உன்றன் குணங்காட்டும்.


33, ஆசை யுள்ள ஆத்மீக
அன்பு சுதந்திரம் அடைந்தின்று
பேசும் முப்பது ஆண்டுகளில்
பேணி யுழைத்த நம்தலைவர்
நேசம் வளர்க்கும் வருங்கால
நிலத்தின் பெருமை யத்தனையும்
ஆசை நேரு! வாரமூன்றில்
அவனி யறியச் செய்திட்டாய்!

34. நாட்டு வாழ்வு நனிதழைக்க
நாளு முன்னை வாழ்த்துகின்ருேம்
ஊட்டும் விதமாய்ப் புத்தியூட்டி
உலகைத் திருத்தும் காந்திஜியின்
நாட்டம் நிறைந்த நல்லுரையில்
நம்பி உழைக்கும் நேருஜியின்
தேட்டம் சிறந்த சீர்களிலே
சேர்ந்துஉழைக்கத்தினம்முயல்வோம்.

35. க்ஷேம மாக நாம்வாழத்
தினமுங் காணும் அவர்கனவு
காமர் நாட்டில் நனவாகக்
கால மெல்லாம் நிதமுழைப்போம்
*க்ஷாமம் நீங்கும் வழிதேடித்
தரந்தர மாகத் தொழில்வளர்ப்போம்
தீமை யெல்லாம் அறமறந்து
சேர்ந்து வாழும் வழிகாண்போம்.

— முற்றும் —

* பஞ்சம்


இலக்கிய மஞ்சரி

4-ம், 5-ம், 6-ம் புத்தகங்கள்

பாடசாலைகளில் இலக்கிய பாடமாக, நான்காம், ஐந்தாம், ஆறும் வகுப்புகளுக்கு உபயோகிக்கக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளன.

விலை : 4-ம் புத்தகம் ... 50 சதம்
5-ம் ,, ... 60 ,,
6-ம் ,, ... 75 ,,

சுன்னுகம்: தனலக்ஷ்மி புத்தகசாலை



# இதய ஊற்று

கூசின்

அத்தியாயம் 6

## பொன்னர் காவடியாட்டம்

"செடிற் காவடி ஆடுகிறவனிலும் பார்க்கப் பின்னுக்குப் பிடிக்கிறவனிற்றான் அதிக காரியம் தங்கியிருக்கிறது. குடும்ப வாழ்க்கையும் ஒரு செடிற் காவடி என்று சிலர் சொல்வார்கள்."

— அனுபவ சாஸ்திரம்

**நவகிரிப் பொன்னர் என்**றாலே அந்தப் பிரதேசத்தில் தெரியாதவரில்லை. நிலாவரையிலிருந்து சற்றுத் தூரத்துக்கப்பால் அவர் வசித்துவந்தார். அவர் ஒரு தோட்டக்காரன்; அத்தோடு தாருத் தொழில்களும் செய்பவர். பொதுவாக நல்ல உழைப்பாளி. அவருடைய உழைப்புக்கு அவர் விரைவில் ஒரு பெரிய பணக்காரனாக, பொது உடைமைவாதிகளின் வார்த்தைப்படி பணத்தை முடக்கி வைத்திருப்பவராக வந்திருப்பார். அவரில் ஒரு நல்லகுணம்; உழைக்கும் பணம் முழுவதையும் ஏழை எளியவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விடுவார். ஆனால் அவர் பொதுஉடைமைவாதம் தெரிந்தவரல்ல. எனினும் பொதுஉடைமை வாதிகள் செய்யாத காரியத்தை அவர் செய்து வந்தார். தவிர, அவர், இல்லாளுக்கு அமைந்து நடக்கும் சற்புருஷனாகவும் விளங்கினார். உழைக்கும் பணம் முழுவதையும் தனது மனைவியிடம் முதலில் கொடுத்து விட்டுப் பின்னர் சிறிது சிறிதாக வாங்கி ஏழை எளியவர்களுக்கு வழங்குவார்.

ஏழை எளியவர்களுக்குக் கொடுப்பதில் மற்றவர்களைப் போல் அவர் கண்ணை மூடிக்கொண்டு எல்லோருக்கும் கொடுத்துவிடமாட்டார். 'பாத்திரமறிந்து பிச்சை கொடு' என்பது அவர்க்கு நல்லாய்த் தெரியும். யாழ்ப்பாணப்பகுதியில் யார் ஏழை எளியவர்கள் என்பது அவர் அறிந்துள்ள காரியம். மரம் ஏறும் தொழிலாளர்கள்தானே ஏழை எளியவர்கள். அவர்களுக்குத்தான் நவகிரிப் பொன்னர் தன் பணத்தை வாரி வழங்குவார்.

இதனால் பணம் பொன்னர் இடத்தில் முடங்காது செறிந்தது. உதாரணமாக நவகிரிப் பொன்னர் சுன்னாகச் சந்தைக்குப் போய் வருவதானால் மற்றவர்களைப்போல் பஸ்ஸில் ஏறிப் போய் வரமாட்டார். பஸ் சொந்தக்காரரிடம்தானே பணம் தேங்கிக் கிடக்கிறது. நடந்து போய் நடந்து வருவார். போகும் பொழுதும் வரும்பொழுதும் வழியிலுள்ள மரம் ஏறும் தொழிலாளருக்குப் பஸ் காசையும் அதனோடு மேலதிகமான பணத்தையுஞ் சேர்த்து வழங்குவார்.

'காகம், கொக்கு, கனகிளி, அநுமான், பேசும் இராவணன், பின் கும்பகர்ணன்' என்று குடிகாரரின் நிலையை வகுத்திருக்கின்றனர். இதில் கடைசிப்பருவம் கும்பகர்ணப் படலம். இந்தக் கடைசிப் பருவ நிலை வருமளவும், பொன்னர் குடிப்பார். கும்பகர்ணப் பருவம் வந்தபின், வசதியான ஒரு இடத்தில் உறங்கி விடுவார்.

இந்தத் தர்ம கைங்கரிய விஷயத்தாற், பொன்னருக்கும் அவர்தம் பத்தினிக்கும் இடைக்கிடை வாக்குவாதம் நடைபெறுவதுண்டு. வாக்குவாதம் முற்றிக் கொலை என்ற அளவுக்கு வந்து விடுவதுமுண்டு. பொன்னர் அப்படியெல்லாம் ஒரு பெண் பழியைத் தேடிக்கொள்ளும் சுபாபம் உடையவரல்ல. பணங் கேட்கும் சில சமயத்தில் தமது பத்தினி கொடுக்க மறுத்தால் அவர் ஒரு பெரிய ஆயுதம் வைத்திருக்கிறார். அது உங்களுக்கும் எனக்கும் வாய்க்காத—கிடையாத — இடவிசேஷத்தாற் கிடைத்த ஆயுதம். 'பணங் கொடாவிட்டால் போ; நிலாவரைக் கிணறு இருக்கிறது' என்று பொன்னர் சொல்வார். பணங் கதறிக்கொண்டு கையில் வரும். நீங்கள் நாங்கள் சொன்னால் நிலாவரைக்கிணறு எவ்வளவு தூரம். பொன்னருக்கு அது அருகில் அல்லவா இருக்கிறது. பயப்படத்தானே வேண்டும். உடனே பணத்தை எடுத்துக் கொடுத்து விடுவாள். எத்தனையோ பேரின் இக்கட்டுகளைத் தீர்த்துவைத்த அந்த நிலாவரை இந்தத் தர்ம கைங்கர்யத்தையும் செய்து வந்தது. இதை அறிந்தறிந்து போலும் இப்பொழுது பலர் நிலாவரைக்கு அருகிலே குடியேறுகிறார்கள். பொன்னர் இதோ 'போகிறேன் நிலாவரைக்கு' என்று புறப்படுவார். பிச்சை வேண்டாம் தாயே நாயைப்பிடி என்பது போல அவரைவெகுமன்றாட்டத்தோடு கூட்டிக்கொண்டுபோய்ப் பணத்தைக் கொடுத்தனுப்புவாள். நீங்களும் நிலாவரைக்கருகில் வீடு கட்டலாமா என்று யோசிப்பீர்கள்.

ஒருநாள் மகாதேவனும், லலிதாவும், நிலாவரையருகில் இருந்து பேசிக்கொண்டிருக்கும் பொழுது, நவகிரிப் பொன்னரும் அவர் மனைவியும் இழுபறி பட்டுக்கொண்டு அவர்களை நோக்கி வந்தனர். அரையிற்கிடந்த பொன்னரின் சீலையை அவர் மனைவி பிடித்துப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். பொன்னர் அவளையும் இழுத்துக்கொண்டு நிமிஷத்துக்கு நிமிஷமாக முன்னேறி வந்தார். இவர்களின் செடிற்காவடி விளையாட்டை மகாதேவனும் லலிதாவும் பார்த்து இரசிக்கலாயினர்.

'இவள் ஒரு பேய்ச்சி' என்று மகாதேவன் பொன்னனின் மனைவியைக் குறித்துச் சொன்னான்.

'அவன் என்ன செய்வது'.

'சாகவிரும்பினவன்' இப்படியா இழுபறிபடுவான்; சொல்லிக்கொண்டா சாகவேண்டும்'

'நீங்கள் சொல்லாமற் பேசாமல் வீடுமாறிக் கொண்டு போனமாதிரியா? எல்லாரும் செய்வார்கள்.'

'அவன் தன் மனைவிமேல் அன்பாயிருக்கிறான் என்று தானே நீ சொல்லுகிறாய். இவ்வாறு மகாதேவன் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது பொன்னரின் செடிற்காவடியாட்டம் துரித நிலையை அடைந்தது. அவர்களுக்குக் கிட்ட வரவர ஆட்டமும், தாளக்கட்டும் உச்சநிலையை அடைந்தன. பொன்னரின் மனைவி இரண்டுகையாலும் பொன்னரின் அரையிலுள்ள சீலையை

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)

---

★ உலகத்திலே இருக்கிற பத்திரிகையெல்லாத்தையும் புரட்டிப் பார்த்துக்கொண்டு திண்ணைக்குப் பாரமாக இருக்க எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

# அது கதை மெய்தான்

"எப்படி இம்முறை விளைச்சல்?" என்று கேட்டுக் கொண்டே முகத்தார் கிடுகுப் படலையைத் திறந்து கொண்டு வந்தார்.

அப்போதுதான் நான் 'கூப்பன்' அரிசியும், கோப்பி சீனியும் வாங்குவதற்குச் சொன்னமுத்துவிடம் காசு எண்ணிக் கொடுத்துக்கொண்டிருந்தேன்.

"என்னகாணும் நீரும் கூப்பன் அரிசி வாங்கிறீரே! எனக்குச் சொன்னாற் பாந்தனியிருந்து ஒரு சாக்கு நெல்லுக் கொண்டு வந்திருப்பேனே," என்று முகத்தார் இடுப்பிலே கையைவைத்துக் கொண்டு மதிப்பாகப் பேசினார்.

"இந்தப்பக்கம் வரும்போதெல்லாம் இப்படிச் சங்கையாகத்தான் பேசிவிட்டுப் போய் விடுகின்றீர். சங்கக் கடைகளும் மந்திரி இரத்னயகாவும் இருக்கும் வரை எம் போன்றவர்களை அசைக்கவே முடியாது. ஓய்! அந்த மொலமுரே எல்லோ செத்துப்போனார்; உமக்குத் தெரியாதோ?" என்றேன் முகத்தாரைப்பார்த்து.

"அப்படித்தான் றயிலுக்கை கதைச்சினம், அந்த மனிதன் யானை பிடிப்பதில் மகா கெட்டியாம்" என்று கேள்விப்பட்டேன்.

"யானை பிடிக்கிற விஷயம் ஒருபுற மிருக்கட்டுக்கும்; பாராளுமன்றத்துக்கு ஒரு தலைவரை இனித் தேடுவது தான் பெரிய கஷ்டமாக இருக்கிறது. உம்மடை சிற்றம்பலம் இருக்கின்றாரே, அவருக்கும் திசையடிக்கும்போலத் தோன்றுகின்றது. எதிர்க் கட்சியினர் மந்திரி சிற்றம்பலத்தின் பெயரையும் தெரிவித்திருக்கின்றார்களாம்.

"ஆமோ சிங்கள மந்திரிக்குத்தான் இந்த இடம் கிடைக்குமாம் என்று சங்கக்கடைக் கிளாக்கர் சொன்னார்" என்று ஏதோ விஷயம்தெரிந்தவரைப் போல முகத்தார் கூறினார்.

"ஓய்! மந்திரி இரத்னயகா அவர்களுக்குத்தான் நல்ல ஆதரவு இருக்கின்றதெனச் சென்ற வாரத்து ஈழகேசரியிலும் அதன் கொழும்பு நிருபர் எழுதியிருந்ததைப் படித்

### சோணசலம்

தேன். சிற்றம்பலமும் ஆள் ஒரு கெட்டிதான். சேர் துரைசுவாமி ஸ்பீக்கராக இருந்த காலமும் ஒன்று இருந்தது. யார் கண்டது ஒருவேளை சிற்றம்பலத்தாருக்குக் கிடைத்தாலுங் கிடைக்கும்" என்றேன் நான்.

"ஆர்தான் வந்தாலும் எங்கள் குறை தீரப்போவதில்லை. அதுபோக, விளைச்சலைப்பற்றிக் கேட்டேன், நீர் ஒன்றும் பேசிறீரில்லை"

"எனக்கு வயல் வாய்க்கால் இருந்தால் தானே, விளைச்சலைப்பற்றி அக்கறை எடுக்கவேண்டும். நீர் அவருடைய காலையும் இவருடைய காலையும் பிடித்துப் பாந்தனிலும், கிளிநொச்சியிலும் பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர் என்று தேடிக்கொண்டீர். விளைச்சல் எப்படி? என்று உம்மைத்தான் நான் கேட்க வேண்டும்."

"நல்லாய்ச் சொன்னீர். உம்மைப்போல உலகத்திலே இருக்கிறபத்திரிகையெல்லாத்தையும் புரட்டிப் பார்த்துக் கொண்டு நேரத்துக்கு நேரம் சப்பிக்கொண்டு திண்ணைக்குப் பாரமாக இருக்க எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அங்கினை இங்கினை என்று ஓடித்திரிந்தால் எங்கள் வீட்டிலே உலை கொதிக்கும்"

"முகத்தாரே, உம்மைப் பற்றி எனக்கு நல்லாகத் தெரியும். 'கிசு கிசு' என்று காசடித்துப் பணஞ் சம்பாதிக்க வேண்டுமானால் நல்ல அசலான வழிகள் இருக்கின்றன. வயலுக்கை பணத்தை இறைத்துவிட்டு வானத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும் உம்போன்றவர்கள், இலேசாகப் பணம் சேர்க்க வழி சொல்லட்டா?"

"எங்கே சொல்லும் பார்க்கலாம். ஆரைப் பார்த்தாலும் இந்தக் காலத்திலே காசு சேர்க்கிறதையே தொழிலாக்கியிருக்கிறார்கள். சரி, உமது யோசினையையும் அறிவோம். ஏதோ தலைபோற காரியமே, இல்லைத்தானே!"

"முகத்தாரே, உமது தலைக்குள் ஏதும் இருந்தால் தானே தலையைப்பற்றி உமக்குக் கவலை ஏற்படும்! இருந்தாலும் சொல்லுகிறேன் கேளும்: மிக விரைவிலே பணக்காரனாகவேண்டுமானால் மூன்றுவழிகள் இருக்கின்றன. ஒன்று: சங்கக்கடை மனேச்சராவது. இரண்டு: சீதனம் உள்ள பெண்ணைப்பார்த்துக் கலியாணஞ்செய்துகொள்வது. மூன்று: குதிரைரேஸிலே திசையடிப்பது.

"நல்லாய்ச் சொன்னீர். அது கதை மெய்தான்" என்று சொல்லிக்கொண்டே திண்ணைக் கட்டில் இருந்த முகத்தார் கதிரைப்பக்கம் எழுந்து வந்து குந்தினார்.

"வெற்றிலையைப்போட்டு வாசலிலே துப்பாதேயும்" என்று இரைந்துகொண்டே எனது மனைவி அடுக்களைக்குள் இருந்து கிளம்பினாள். முகத்தாருக்கு முகம் ஓடிக் கறுத்தது.

"சரி சாப்பாட்டை முடித்துக்கொண்டு பின்னேரம் வாரும்" என்று சொல்லி ஆளை மெதுவாக அனுப்பி வைத்தேன்.

---

# இதய ஊற்றின் தனிச் சுவை

'கூசின்' எழுதிவரும் கதையைப் படிக்கும் வாசகர் ஒருவர் எழுதுவதாவது:

வாழ்க்கைமுறை, நாகரீகம் என்னும் இவற்றிலே, வெகுதூரத்துக்கப்பால் இரு அந்தங்களிலே யுலாவும் (மகாதேவன், சைக்கிள்காரி) இரு பாத்திரங்களையும் ஒரேயிடத்தில் இணைத்துக்கொண்டு செல்லும் இதய ஊற்று தங்களுக்கே யுரிமையான அந்தத்தனிச்சுவையுடன் சுரந்துகொண்டிருக்கின்றது. நாகரீகத்தால் தம்முள் மாறுபாடுள்ள கௌபீனம், உட்சட்டை என்பவை கதையிலே பின்னப்பட்டிருக்கும் முறை விசேஷமானது. உயர்வான நகைச்சுவை பிறக்கின்றது. அந்த இடத்திலே இடையிடையே அத்தியாயத் தொடக்கத்தில் பெரியோர்களின் வாக்குகள் சேர்க்கப்பட்டிருப்பது நன்றாயிருக்கின்றது.

வானத்திலே பறவாது, புறம்பான ஒரு உலகிலே சீவிக்காது, நாட்டு வாழ்க்கையோடொட்டிய நவீனங்களைச் சித்தரிக்கும் துறையிலே செல்லும் அரிய முயற்சிக்கு எமது பாராட்டுக்கள்.

காட்டுக்கந்தோர், குருநாக்கல். — சி. பொன்னம்பலம்


# சுதந்திர விழா அலங்காரம்

## புத்தகம்வழங்கும்முறையில்மாற்றம்

## வானொலி தமிழ், சிங்கள நிகழ்ச்சிகள் மோசம்



கொழும்பு - நிருபர் கடிதம் -



8-2-51


சுதந்திர இலங்கையின் மூன்றாவது ஆண்டு பூர்த்தி விழா மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. காலையில் ஆலயமணிகள் ஒலித்தன. பூசையும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடைபெற்றன. பிறநாடுகளிலிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்து குவிந்தன. காலிமுக மைதானத்தில் இராணுவ அணிவகுப்பு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. சமூகமளித்தவர்களின் ஆடை அணிகலன்களும் நவநாகரீக முறையில் அமைந்திருந்தன.

பிரதமர் சேனநாயகா அவர்கள் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வானொலி மூலம் சுதந்திரதினச்சோபனசெய்தியைக் கூறினார். கடந்த மூன்றாண்டுகளிலும் சுதந்திர இலங்கை பல துறைகளிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தை மிக அழகாகக் குறிப்பிட்டார். பகல் 12 மணிக்கு பிரதம தேசாதிபதி சோல்பெரி தமது செய்தியை வானொலி மூலம் தெரிவித்தார். மாலை ஏழு மணியிலிருந்து காலிமுக மைதானத்தில் வாணவேடிக்கை நடைபெற்றது. இதைப் பார்த்தற்குப் பல்லாயிரக்கணக்கான மக்களும் குழந்தை குட்டிகளும் காலிமுகத் திடரிலும் அரசாங்க உத்தியோகஸ்தர் காரியாலயக் கட்டடத்திலும் குழுமியிருந்தனர். காலிமுகத் திடல் முழுவதும் பெருங் கூட்டம் நெருக்கமாக நின்றது. இத்தினத்தில் இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் உருவச் சிலைகளுக்கு மலர்மாலை சூட்டி அஞ்சலி செய்யப்பட்டது. கொழும்பின் புறநகர்களிலிருந்து பஸ்வண்டிகளிலும் புகையிரதங்களிலும் சனங்கள் கூட்டம் கூட்டமாகக் கொழும்புப் பட்டணத்தைத் தாக்குவதற்கு வரும் படைகள் போல வந்து சேர்ந்தனர்.

### வித்தியாதிபதியின் யோசனை

இலங்கை வித்தியாதிபதி டொக்டர் ஹௌஸ் பத்திரிகை நிருபர் மகாநாடு நடத்துவதில் நல்ல பேர் வாங்கி வருகிறார். அரசினர் பாடசாலைகளில் வறிய மாணவர்களுக்கு இலவச புத்தகம் வழங்கிவரும் முறையில் பெரியதொரு மாற்றம் செய்யப் போகிறாராம். வாசினைப் புத்தகங்களும் கணக்குப் புத்தகங்களும் இனிமேல் உபாத்தியாயரிடம் கொடுக்கப்படுமாம். வகுப்பு ஆரம்பத்தில் உபாத்தியாயர் இவற்றைக் கொடுத்து மறுபடி பாடசாலை முடியமுன்னர் பெற்றுக் கொள்வாராம். உபாத்தியாயர் இந்த உத்தியோகம் பார்க்கவே அவருடைய அரைவாசி நேரம் போய்விடும். மேலும் பிள்ளைகள் வீட்டுக்குப் போய் வீட்டு முகட்டைப் பார்த்துத்தான் பாடங்களை ஆயத்தஞ்செய்ய வேண்டிவரும்.

சில பிள்ளைகள் ஒரு வருடத்தில் இரண்டு மூன்று புத்தகப் பிரதிகளையே கிழித்துவிடும் இயல்புள்ளவர்கள் என்பதை வித்தியாதிபதி யறியார் போலும். வர்த்தகக் கல்வியும் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்படுமாம். ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் அதிக சீர்திருத்தம் செய்யப்படுமாம். பள்ளிக்கூடங்களில் நூல் நிலையங்கள் அமைப்பது அத்தியாவசியம் என்பதையும் வற்புறுத்தியுள்ளார்.



கல்வி மந்திரி நுகவெல

கல்வி மந்திரி நுகவெல அவர்கள் விரைவிற் சீமை செல்வார். உதவி மந்திரி கனகரத்தினம் அவர்கள் தற்காலிகக் கல்வி மந்திரியாகக் கடமையாற்றுவாரெனத் தெரிகின்றது

### பிள்ளையார் பாடசாலை

கொழும்பில் தமிழ் மூலம் கல்வி கற்பிக்கப்படும் ஆரம்ப பாடசாலையொன்று பம்பலப்பிட்டியில் ஆரம்பமாகின்றது. பிள்ளையார் பாடசாலை என்ற பெயருடன் வெள்ளவத்தை புதுக்கதிரேசன் கோவில் மண்டபத்தில் 12-2-51 காலை ஆரம்பமாகின்றது. ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலே இத்தகைய தொரு பாடசாலையின் அத்தியாவசியத்தைப் பற்றிப் பல முறை எழுதியுள்ளேன். இப்பாடசாலை விரைவில் பெரிய கல்லூரியாகிக் கொழும்பு இந்துக்களுக்குப் பெருந் தொண்டாற்றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### ரேடியோ நிலையம்

ரேடியோ நிலையத்துத் தமிழ் நிகழ்ச்சிப்பகுதி யதிகாரி இன்னும் நியமிக்கப்படவில்லை. பொது ஊழியர் கழகம் (பப்ளிக் சேவிஸ் கொமிஷன்) இரண்டாம் முறையாகச் சில விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சை செய்துள்ளது. இம்மாதம் முடிவதற்குள் நியமனம் நடைபெறக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வேறுசில நியமனங்களும் நடைபெறவிருக்கின்றன. பொதுவாகத் தமிழ் நிகழ்ச்சிகளின் தரங் குறைவாகவே இருக்கின்றது. சிங்கள அபிமானிகளும் சிங்கள நிகழ்ச்சிகளைப்பற்றிப் புகார் செய்கின்றனர்.

### விமான வேடிக்கை

காலிமுகத்திடரில் சுதந்திரதினத்தன்று வாணவேடிக்கை நடைபெற்றது. ஆனால் அதற்கு முதனாள் நீர்கொழும்புப் பாதையிலுள்ள கட்டுநாயக்க விமான நிலையத்தில் மக்கள் கழுத்துமுறிய அண்ணாந்து பார்த்துத் திடுக்கிடக் கூடிய விமான வேடிக்கைகள் நடைபெற்றன. பிரிட்டன் தூரகிழக்கு நாடுகளிலிருந்து வந்த விமானங்கள் ஆகாயத்திற் பறந்து முன்னொருபோதும் இலங்கையிற் காணப்பெறாத அணிகரமான விளையாட்டுக்களைச்செய்து காண்பித்தன.

**WANTED**

Applications are invited for the post of Manager, Vali-North C. A. P. & S. Society, Ltd., Chunnakam, on a salary of Rs. 150/- per month and no allowances of any kind. Minimum qualifications required are:– J. S. C. English, knowledge of type-writing, book-keeping and agriculture. Applicants should be not less than 30 years old. Selected candidate should be prepared to furnish cash security for Rs. 1000/- and property security for Rs. 2000/-

Applications with copies of three recent testimonials should reach the Honorary Secretary of the Society not later than 20th February, 1951.

*Hon. Secretary*
VALI-NORTH
C. A. P. & S. S., LTD.,
Chunnakam.

6th February, 1951.
[4236]

❋ மட்டக்களப்பில் ஏற்பட்ட அகால வெள்ளத்தைச் சுட்டிக்காட்ட நமது பிரதிநிதிகளுக்குத் துணிவு பிறக்கவில்லை.

# வெள்ள நிவாரண விநோதம்!

## அதிகாரிகள் சமாளித்த விதம்

மட்டக்களப்பு, 8-2-51

இவ்வருடம் மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளம் என்றுமில்லாதது. வெள்ளம் சாதாரணமாக மார்கழி மாதத்தில் ஏற்படுவது வழக்கம். 1913-ம் ஆண்டுப் பெருவெள்ளமும் தை முற்பகுதியில் ஏற்பட்டதாம். இம்முறையோ வெள்ளம் தை மாதத்தின் பிற்பகுதியில் வந்தது. வெள்ளம் ஒரு முறையல்ல மும்முறை பெருகியது. இதனால் இப்பகுதி மக்கள் அடைந்த கஷ்ட நஷ்டங்கள் பலப்பல. அரசாங்கம் கஷ்ட நிவாரணத்துக் கென ஏலவே ஒதுக்கியிருந்த தொகையுடன் இப்பகுதி மாகாணாதிபரும், பிரதிநிதிகளும் சமாளித்துவிட்டனர். அரசாங்கம் ஒதுக்கியிருந்த பணம் குறைவு என்ற காரணத்தினால் மிகக் குறைந்த தொகையினரே நிவாரணம் பெற்றனர்.

இந்த நிவாரணமும் கிராமத் தலைமைக்காரரின் கண்ணியத்தைப் பொறுத்திருந்தது. ஒரு சிலருக்கே இந்த நிவாரணங் கிடைத்தது. உண்மையான உதவி பெறவேண்டியவர்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள்.

**கிழக்குத் தபால்**

**நமது நிருபர்**


இலங்கையின் வேறு பகுதிகளில் இத்தகைய அபாயங்கள் ஏற்படும்போது சமூக சேவா மந்திரியும், சமூக சேவைப் பகுதி அதிகாரியும் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று வேண்டிய உதவிபுரிதல் வழக்கம். ஆனால் மட்டக்களப்பில் ஏற்பட்ட அகால வெள்ளத்தைக் கவனிக்க அவர்களுக்கு மனது வரவில்லை. அதைச் சுட்டிக்காட்ட நமது பிரதிநிதிகளுக்குத் துணிவு பிறக்கவில்லை.

இப்படியான கஷ்டவேளையில் இங்கு சேமிக்கப்பட்டிருந்த நெல்லை அயலூர் வியாபாரிகள் வாங்கி ஏற்றியதன் மூலம் பெரும் பஞ்சத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். மட்டக்களப்புப் பட்டின சபையும் வேறு பல ஸ்தாபனங்களும் மாசி மாதம் முழுவதும் இங்கிருந்து நெல் ஏற்றுமதி செய்வதைத் தடை செய்யவேண்டுமென எடுத்துக்காட்டியும் அது அரசாங்கத்தின் செவியிற் புகவில்லை.

### சர்வோதய தினம்

மகாத்மா காந்தி அமரானமையை ஞாபகப்படுத்தும் நோக்கமாக மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. புலவர் ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர் தமது தலைமையுரையில் "மகாத்மா காந்தி பொறுமையில் தருமனையும் வென்றுவிட்டார். தருமன் பொறுத்துப் பொறுத்து முடியாமல் மகாபாரத யுத்தத்தில் வாளேந்தினார். ஆனால் மகாத்மாவோ கடைசிவரை பொறுமையாக இருந்து வெற்றி பெற்றார்" எனக் குறிப்பிட்டார். திரு. ம. சிவகேசராசா அவர்கள் பேசுகையில் "இன்று உலகம் யுத்த பயத்தினால் திணறிக்கொண்டிருக்கிறது. ஒரு பக்கம், அமெரிக்கர்கள் தங்கள் பணத் திமிரால் உலகை ஆட்டிப்பார்க்கின்றனர். மறுபக்கம் ருஷியாவும் அதனுடன் சேர்ந்த நாடுகளும் உலகைப் பயமுறுத்துகின்றன. இத்தகைய நெருக்கடியான நிலையில் உலக நாடுகள் இந்தியாவிற்குப் பெரு மதிப்பளிக்கின்றன. இதற்குக் காரணம் இந்தியாவின் படைப்பலமல்ல. இந்தியா காந்தி வழியைப் பின்பற்றி நடுநிலை தவறாது நடப்பதுதான்" எனக் குறிப்பிட்டார். தேசிகர் கா. அருணாசலமவர்கள் "மேல்நாட்டினர் இந்த உலகையே நித்தியமென நம்பி எல்லாவற்றையும் இங்கேயே அனுபவித்துவிடப் பார்க்கின்றனர். கீழ்நாட்டினர் ஆத்மீக வாழ்வில் கொண்ட நம்பிக்கையில் மறுபிறப்பை உன்னி வாழ்கின்றனர். இதனாலேதான் உலக மகான்கள் எல்லாரும் ஆசியாவிலே தோன்றினார்கள்" எனக் குறிப்பிட்டு மகாத்மாவின் குண விசேஷங்களையும், சேவைகளையும் விரிவாக எடுத்துக் காட்டினார். திரு. ஆர். பத்மநாதன் முதலியோரும் பேசினர்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)



ஒரு புராதன வைத்யம்

இவ்விதமாகவே நல்ல செய்திகள் பரவுகின்றன. வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர் குழந்தைகளை நன்கு பாதுகாக்கிறது



WOODWARD'S GRIPE WATER
keeps baby well

W. WOODWARD LTD. LONDON, ENGLAND.

1930

# ஈழகேசரி

[illegible], [illegible] ௨௮
— [illegible] 32 —
[illegible] இல. 805

## தலைவர் தெரிவு

இதுவரைகாலம் இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் தலைவராகவிருந்து தமது கடமையைத் திறமையாக நடாத்திவந்த சேர் பிரான்ஸிஸ் மொலமூறே காலஞ்சென்றமையாற் புதிய ஒரு தலைவரைத் தெரியவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவ்விஷயம் சாமானியமானதன்று. இப்பதவிக்கு ஏற்ற ஒருவரைத் தேடிப் பெறுவது கஷ்டமாகும். மிக்க கௌரவமும் பொறுப்பும் வாய்ந்த இப்பதவியை வகிக்கப் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் பலர் அவாவக்கூடும். ஆனல் ஏற்ற தகுதியும் ஆற்றலும் பொருந்திய ஒருவரே இப்பதவியை வகிக்கு உரிமையுடையர். இப்பதவியை வகிப்பவர் எல்லாக் கட்சியினர்க்கும் இணங்க நடக்கக் கூடியவராயும் நடுநின்று நீதி செலுத்தக் கூடியவராயும் இருக்கவேண்டும். அப்போதுதான் சபையின் நடபடிக்கைகள் இனிது நடைபெறுவது சாத்தியமாகும்.

இப்பதவிக்குத் தெரியப்படுபவர் யாவராலும் ஏகமனதாய் நியமிக்கப்படின், அது ஒரு பெருமையாகும். பல்வேறு கட்சிகள் அபிப்பிராய பேதங்கள், கொள்கைகள் என்பன நிறைந்த இச்சபையில், இத்தெரிவு சர்வ சம்மதமாக நிறைவேறுமென இலகுவிற் சொல்லிவிட முடியாது. எப்படியாயினும் ஏதோ ஒரு கட்சியிலிருந்துதான் தலைவர் தெரியப்பட வேண்டும். தெரியப்பட்டவுடன் தலைவர் பொதுமை நிலையை அடைகின்றனர். சபையிலுள்ளார் யாவரும் இவர்க்குச் சரிதான். பட்சபாதமின்றி எல்லோரையும் ஒரே தன்மையாகத் துலாக்கோல் போற் சமன் தூக்கி நடத்தி அவர்கள் அனுதாபத்தையும் மதிப்பினையும் பெறுவது இவரது பெரிய கடனாகும்.

இப்போது பிரதிநிதிகள் சபையில் அதிகாரம் வகிக்கும் ஐக்கிய தேசியக்கட்சியினர் தாம் நினைத்தபடி ஒருவரைத் தெரிவதாயின், எதிர்க்கட்சியினர் இத்தெரிவில் பங்குபற்ருது விடுவர். ஆகையால் இவ்விருகட்சியினரும் ஒருங்கு சேர்ந்து இவ்விஷயத்தில் இணக்கமடைந்து பொதுவான ஒருவரைத் தெரிந்து கொள்வதே சாலவும் பொருத்தமானதொன்று. தவிர இவ்விருகட்சியினரும் தாம் தாம் நினைத்ததை நிறைவேற்ற முற்படாது, நடு நிலைமை வகித்துத் தமது கடமையைச் சிறப்பாக வகிக்கக் கூடியவர் யாவரென்பதை ஆராய்ந்து நோக்கி, அவரையே இப்பதவியில் வைக்க முற்படவேண்டும். உலகில் எந்த நாட்டிலும் இம்முறையே கையாளப்படுவது. மேலும் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் சிறுபான்மை வகுப்பினர் உரிமையும் இவராலேயே பாதுகாக்கப்பட வேண்டியது. எனவே, எல்லோரதும் சம்மதம் இவ்விஷயத்தில் கிடைக்குமாயின் அது பெரும் பாக்கியமென்றே கூறவேண்டும்.

தலைவர் தெரிவு அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கின்றது. மிகப் பொறுப்புமிக்க இச்சந்தர்ப்பத்தில் எல்லாக் கட்சியினரும் ஆராய்வுடன் யோசனையை மேற்கொண்டு நடப்பது பிரதானம். தலைவர், எக்கட்சியிலிருந்து பிரேரிக்கப்படினுங் காரியமில்லை. அவர் எல்லாக் கட்சியினரதும் அனுதாபத்தையும் ஆதரவையும் பெறுவாரா என்பதை நன்கு நோக்கவேண்டும். ஒரு கட்சியின் விசேஷ மதிப்பினைப் பெற்றவர் மற்றைய கட்சியினரால் முற்ருக விரும்பப்படாது போகக் கூடும். ஆகையால் பல்வேறு கட்சியினரும் இவ்விஷயத்தில் பிடிவாதம் பாராட்டாமற் சபையின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற உயரிய நோக்குடன் இவ்விஷயத்தில் தமது கடமையை ஆற்றுவாராக. இப்படியாகத் தாராள சிந்தையுடன் இத்தெரிவு நடத்தப்படின், ஏகமனதுடன் ஒரு தலைவரை இலகுவில் பெறலாம். பிரதிநிதிகள் சபைக்குள்ள மதிப்பும் கௌரவமும் மேன்மேலும் உயரிய நிலையடையும். இலங்கைப் பிரதிநிதி சபையினர் தமது மதிப்பையும் உயர் நிலையையும் நோக்கி இவ்விஷயத்திலே தாராள சிந்தையுடன் நடந்து கொள்வாரென்பதே எமது நம்பிக்கையாகும்.

## மது நீக்கம்!

இலங்கையில் மது நீக்கம் ஏற்படவேண்டுமென்ற பிரச்சினை இப்போது சிலரால் மிக்க ஆர்வத்துடன் எடுத்துக் காட்டப்படுகின்றது. கொழும்பில் ஒரு வட்டாரத்தில் மது நீக்கம் ஏற்பட்டதைக்கண்டு இவர்கள் மிக்க அக்கறைகொள்ளுகின்றனர் போலும். இலங்கையில் இது சாதாரணமாக நிறைவேற்றிவிடக் கூடிய காரியமல்ல. அரசினரும் தலைவர்களும் இதற்கு மாருக நிற்கும் வரையும் இலங்கையில் மது நீக்கம் விரும்பியபடி முற்ருக நீக்கப்படலாமென்பது சந்தேகந்தான். மதுவரி நிர்வாகப் பகுதியால் அரசினர் அடையும் வருமானத்துக்கு எல்லையில்லை. அத்தொகையை இழக்க அரசினர் விரும்புவாரா? அரசினர் தாம் அடையும் பெரிய வருமானத்தை விசேஷமாக மதிப்பாரேயன்றி நாட்டிற்கு மதுவால் வருந் தீமைகளைப் பொருட்படுத்த மாட்டார். அத்துடன் ஐரோப்பிய நாகரீகத்தை மேற்கொண்டு செல்லும் இலங்கை அரசாங்கம் இவ்விஷயத்தில் மனவிசுவாசத்துடன் நடந்து கொள்வதும் இலகுவானதன்று. அரசினர் மாத்திரமல்ல, கொழும்பிலுள்ள பென்னம்பெரிய பத்திரிகைகளும் மது நீக்கத்தைப் பலமாக எதிர்த்துவருகின்றன. இது ஒருபோதும் சித்தியடையாதென்பது வேறுசில பத்திரிகைகளின் கருத்தாகும். மது நீக்கம் அனுட்டானத்துக்கு வருமுன்னர் மந்திரி சபையினர் அதை முற்ருக அரசாங்கக்கொண்டாட்டங்களில் விலக்கவேண்டாமா? இந்தியாவிலே தேசிய அரசினர் மதுவினை முற்ருக விலக்கி மூன்று வருடங்களாகின்றன. பொது மக்களாயுள்ளோரும் மதுவின் கெடுதியை உணர்ந்து அதை நீக்க உடன்பட வேண்டும். அப்படியொன்றும் இலங்கையில் இல்லாதிருக்க மது நீக்கத்தைச் சடுதியில் ஏற்படுத்தலாமென மனப்பால் குடிப்பதிற் பயன் இல்லை. உண்மையான விசுவாசத்துடன் அரசினரும் தலைவர்களும் இந்த அவசிய விஷயத்தில் உழைத்தால் நன்மை ஏற்படும். அதுவரை இது இனிது கைகூடுமென்பது அபூர்வம்.

## [illegible] ஓரத்தில் — பட்டைசாரி

தென்மராட்சிப் பகுதியிலுள்ள ஒரு கிராமத்திற் சென்ற வாரம் காந்திஜீயின் உருவப்படம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

இப்படத்தைப் பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றினுர். இக்கூட்டத்தில் அப்பகுதியின் பிரதிநிதியும் பங்குபற்றிப் பேசினுர் எனத் தெரிகின்றது.

கனகராயன் ஆற்றை யாழ்ப்பாணப் பக்கந் திருப்பி யாழ்ப்பாணத்தின் வரட்சியை நீக்குவதற்கு அப்பிரதிநிதி பெரு முயற்சிசெய்து வருவது வாசகர் அறிந்ததொன்று.

இதை வைத்துக்கொண்டு பண்டிதர் அவர்கள் பேசிய போது, யாழ்ப்பாணப்பகுதிப் பிரதிநிதிகளின் வரட்சி நீங்கினலன்றி யாழ்ப்பாணத்திற் குளிர்மை யுண்டாக மாட்டாதெனக் கூறிவிட்டு அங்கிருந்த பிரதிநிதியைப் பார்த்து "உங்களுக்குத்தான் சொல்லுகின்றேன்; அவர்களுக்கும் போய்ச் சொல்லுங்கள்' என்று சொன்னுராம். ஆம் பண்டிதரின் கூற்றை ஒருவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். எங்கள் பிரதிநிதிகளுக்கு வரட்சி மட்டுமல்ல, மூளையுமே கலங்கி விட்டது! இவர்களுக்குச் சிறிதுகாலம் ஓய்வு கொடுக்கவேண்டியது நாட்டுமக்களின் கடனாகும்.

### இது சுதந்திரமா?

மூளைக்கலக்கம் ஏற்பட்டிருக்கின்றதென்பதற்குச் சமீபத்திலே தெல்லிப்பழையில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியினரின் மாபெருங்கூட்டத்தைச் சுட்டிக்காட்ட முடியாது. இலங்கைக்குக் கிடைத்துள்ள சுதந்திரம் தமிழரை அடிமைகளாக்கியிருக்கின்றதெனத் தமிழரசுக் கட்சியினர் முரசறைகின்றனர். வெள்ளையர் ஆண்ட நாட்டில் இன்று சிங்களரின் ஆதிக்கம் நிலவுகின்றதெனத் தெல்லிப்பழைக் கூட்டத்தில் ஒருவர் பேசினுர்.

தேசிய ஆர்வமானது நாட்டைத் துண்டுபோடக்கூடாதெனத் தமிழ்க் காங்கிரஸ் பிரசாரப் பீரங்கி ஒருவர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்ருர். பழைய சுதந்திரத்தை மீண்டும் நாங்கள் பெற்றிருக்கின்ரோம் எனப் பிரதமர் சேனநாயகா பேசி மகிழ்கின்ருர். இந்த அழகில் அனைவருக்கும் மூளைக் கலக்கம் உண்டாகியிருக்கின்றதென எண்ணவேண்டியிருக்கின்றது.

### புனிதமடைகின்றனர்

காந்திஜி உயிரோடு இருந்தகாலத்தில் அவருடைய கொள்கைகளில் எள்ளத்தனையும் அபிமானமோ நம்பிக்கையோ இல்லாத பேர்வழிகள் பலர் அவர் சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர் துக்கங் கொண்டாடுகின்றனர். காந்திஜியின் பெயரைச் சொல்லிக்கொண்டு பகிரங்க மேடைகளிலும் ஏறிப் பிரசங்கஞ் செய்கின்றனர். 'மறுகணம் ஹரிஜனருக்கு என்ன ஆலயப் பிரவேசம்?' என்று சொல்லிச் சைவப் பிரசாரத்தில் இறங்குகின்றனர் இந்தப் புண்ணியவான்கள் காந்தி மகானின் கூட்டங்களில் இப்படிப் பேசியாவது புனிதமடையட்டும்!!

### கயிற்று வித்தை

கொழும்பில் நடைபெறும் களியாட்டு விழாவிற்கு எகிப்திலிருந்து ஒரு மந்திரவாதி வந்துள்ளார். இவர் கயிற்று வித்தைகாட்டி மக்களைப் பிரமிக்கச் செய்கின்ருர். இப்படிப் பலரை ஏமாற்றும் வித்தையிற் கரைகண்ட அந்த மந்திரவாதி ஊர் திரும்ப முன்னர், இலங்கையில் உள்ள அரசியல் வாதிகளிடஞ் சென்று அவர்கள் 'கயிறுவிடும்' வித்தையையும் கற்றுக்கொண்டு போவாராகில், எகிப்திலும் அவர் கயிறு விட்டுப் பார்க்கலாமல்லவா?

### பயிருக்குப் பால்

பாம்புக்குப்பால் ஊட்டக் கூடாதென்பது உண்மைதான். ஆனல் நெற்பயிருக்குப் பாலூட்டினல் அவை விசேட சத்துப் பெற்று வளர்ச்சியிற் சிறக்கின்றன என்று அமெரிக்க செய்தி ஒன்று கூறுகின்றது.

இந்தப்பயிரை மேயும் பசுக்கள் மேலதிகமான பாலையுங் கொடுக்கும் சக்தி பெறுமாயின் பாலூட்டிவளர்க்கும் பயிர்களைப் பசு மேய்ந்தாலும் அதனுற் பெரு நட்டம் ஏற்படமாட்டாதல்லவா?

### பம்பாய்த் தமிழர்

பம்பாய்நகரிலுள்ள தமிழர்கள் மாதுங்காவிற் சங்கம் நிறுவித் தமிழை வளர்த்துவருகின்றனர். இவர்களின் தளபதியாக மணிக்கொடி கு. ஸ்ரீநிவாசன் விளங்குகின்ருர்.

இச் சங்கத்தின் 11-ம் ஆண்டு அறிக்கை அழகாக வெளியிடப்பட்டிருக்கின்றது.

பாரதியின்மணி வாக்கைத் துலங்கச் செய்துவரும் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் பல்லாண்டு வாழ்க!

## கோரியா சமரசச் சபை — கனடா மந்திரி கரணம்?

கோரியா சமரச நிர்வாக சபையில் இந்தியாவின் பிரதிநிதி ஸ்ரீ பி. என். ராவ் ஸ்தானம் வகிக்கச் சம்மதித்தாலன்றித் தானும் அச் சபையில் ஸ்தானம் வகிக்க முடியாதென இதுவரை வீரம்பேசிய கனடாவின் வெளிநாட்டு மந்திரி லெஸ்டர் பியர்ஸன் கடைசியிலே அப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டார்.

கனடா பிரதிநிதிகள் சபையில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது கோரியா சமரசச் சபையில் ஸ்தானம் வகிப்பதுபற்றித் தாம் இதுவரை பேசியதை மீண்டும் யோசித்து வருவதாக இவர் தெரிவித்தார்.

## வெள்ள நிவாரண விநோதம்!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

**மது விலக்கு**

மதுவிலக்கிற்காகச் சென்ற மாதம் 27-ந் திகதி ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றது. தவறணை ஒழிப்பிற்குச் சாதகமாக முப்பது வீதமானேரே வாக்களித்தனர். இதனுல் தவறணைகள் மூடப்படவேண்டுமென்ற விஷயம் தோல்வியுற்றது. இம்முறை தோல்வியுற்றாலும், எதிர்காலத்திலே வெற்றி பெறலாம் என்ற துணிவுடையவர்களாய் மதுவிலக்குப் பிரசாரகர்கள் காணப்படுகின்றனர். மதுவிலக்குப் பிரசாரம் ஒழுங்கான வகையில் நடைபெருமையே இத் தோல்விக்கு முக்கிய காரணமாகும். பகிரங்க மேடைகளில் பல அருமையான விஷயங்கள் பேசப்பட்டனவெனினும், வாக்காளர்களை வீடுவீடாகச் சந்தித்துப் பிரசாரஞ் செய்வது நடைபெறவில்லை. சிலரின் அலட்சிய மனப்பான்மையும், எதிலும்குறை கண்டுபிடிக்கும் மனப்பான்மையும் மதுவொழிப்பு வெற்றிபெருமைக்குரிய துணைக் காரணங்களாகும்.

**பட்டின சபையில்**

பட்டினசபையானது தலைவர் தேர்தலின் பின்னர் கூடிய போது பல நிர்வாக சபைகளைத் தெரிவு செய்தது. திரு. வ. தவராசா அவர்கள் கல்லடிக் குடிநீர்த் திட்டம் சென்ற பல வருடங்களாகத் தடைப் பட்டு வருவதைச் சுட்டிக்காட்டி அதனைப்பற்றிக் கவனிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினுர். மக்களை சதா ஏமாற்றக் கூடாதெனவுந்தெரிவித்தார். திரு. ம. சிவநேசராசா அவர்கள் ஒரு தூக்கோஷ்டியை அனுப்பி மந்திரிகளைச் சந்திக்கச்செய்வது நலமெனக் குறிப்பிட்டார். இதனைச் சபை ஏற்றபோது தூதுக் கோஷ்டியில் ஒருவராக திரு. எஸ். ஏ. செல்வநாயகம் அவர்களின் பெயர் பிரேரிக்கப்பட்டது. அவர் அதனை ஏற்க மறுத்ததோடு தான் பலமுறை இது சம்பந்தமாக மந்திரிகளைச் சந்தித்து விட்டதாகவும், இனிமேலும் தூது செல்வதிலே தமக்கு நம்பிக்கையில்லையெனவும் சொல்லி மறுத்துவிட்டார். இச் செய்தி ஒப்சேவர் பத்திரிகையில் வெளியான போது திரு. செல்வநாயகம் தாம் அப்படிப் பேசவில்லையெனவும், மந்திரிமார் தம்முடன் எப்போதும் கண்ணியமாக நடந்துகொண்டார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியர்களை மூட்டைகட்டி இந்தியாவுக்கு அனுப்புவதென்பது இயலாத விஷயம்.

# முஸ்லீம்களுக்கு புத்திமதி

## இலங்கை - இந்திய உறவு முக்கியம்

பிரபல அரசியல் வாதியாகும் சேர் மோர்ஜஸ்மேயில் சமீபத்தில் அலிக்கார் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிற் செய்த அரிய சொற்பொழிவு இந்தியாவில்வசிக்கும் முஸ்லீம்களுக்கு நற்புத்தியைக் கூட்டி வைக்குமாயின் இந்தியாவிற்கு நற்காலம் உதயமாகுமென்பதற்கு ஐயமில்லை. சேர் மோர்ஜ எத்தனையோ உயர்ந்த பதவிகள் வகித்தவர். மைசூர், ஹைதராபாத், ஜெயப்பூர் முதலிய சமஸ்தானங்களின் பிரதம மந்திரியாகக் கடமை பார்த்து யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவர். வகுப்புத் துவேஷம் முற்றாக நீங்கப் பெற்றவர். இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள் இந்திய அரசாங்கத்தைச் சமய சம்பந்தமான அரசாங்கமென எண்ணக்கூடாது. இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள் இந்திய அரசினர்மீது விசுவாசமுடையராக இருக்கவேண்டும்; இந்திய அரசாங்கம் யாவர்க்கும் பொதுவாகவே நடத்தப்படுகின்றது எனக்கூறினார். இந்தியாவிலிருந்துகொண்டு பாகிஸ்தானுக்கு விசுவாசங்காட்டுவது மிக்க துரோகமான செயலெனவும் எடுத்துக் காட்டினர். பாகிஸ்தான் அரசினர் தம்மை முஸ்லீம் அரசாங்கமெனக் கூறிவருவதாலேயே இத் துவேஷங்களும் கஷ்டங்களும் தோன்றியதாகுமெனவுங் குறிப்பிட்டார். எனவே, இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் விசுவாசத்துடன் நடந்துகொண்டால் அரசினர் அவர்களது உரிமைகளை வழங்கிப் பாதுகாப்பது நிச்சயம்.

### இலங்கை வாழ் இந்தியர்

இலங்கையில் வாழும் இந்தியர் நிலையைப் பற்றிய சிக்கல் இடைவிடாது கிளறப்படுகின்றது. இவ்விஷயம் இருநாட்டிற்குமிடையில நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் நிலைப்படவிடாது தடுத்து நிற்கின்றது. எப்படியாவது இந்தப் பிணக்கு நீக்கப்படவேண்டும். இலங்கையரசினர் இங்குவாழும் இந்தியர்க்கு பிரஜாவுரிமை வழங்கும் விஷயத்தில் நீதியாக நடந்து கொள்ளவேண்டும். இல்லையேல் தமது சீவனோபாயத்துக்கு உழைக்க இடங்கொடுக்க வேண்டும். இந்தியரல்லாத வேறு சாதியினர் பலர் இலங்கையில் உளர். அவர்கள் அடையுஞ் சிலாக்கியங்கள் போல் இந்தியர்க்கும் வழங்க அரசினர் உடன்படவேண்டும். இப்படியாவது செய்யாவிடில் இரு நாடுகட்கிடையிலும் நட்பும், இணக்கமும் ஒற்றுமையும்உண்டாவது கஷ்டம். அப்படியன்றி இந்தியர்களை மூட்டைகட்டி இந்தியாவுக்கு அனுப்புவதென்பது இயலாத விஷயம். எப்படியாவது இப் பிணக்கு நீங்க வழி காணவேண்டும்.

### காஷ்மீர்

இச் சமஸ்தான விஷயம் மறுபடியும் ஐக்கிய நாடுகள் சங்கத்தால் எடுத்து விவாதிக்கப்படுமெனத் தெரிகின்றது. புதிய பிரேரணைகள் மூலம் இப்பிணக்கினை நீக்க இச் சங்கம் முயலும் என்று கூறப்படுகின்றது. இவ்விஷயத்தைச் சங்கம் விரைந்து முடிவுசெய்யுமென்பது நம்பக்கூடியதாயில்லை. கோரியா யுத்தமும் உலகப்பிரச்சினைகளும் நெருக்கடியை உண்டாக்கும் இச் சந்தர்ப்பத்திற் காஷ்மீர் பிணக்குக்கு அதிக இடம் உண்டெனக்கருதுவதற்கில்லை. பாகிஸ்தானைப் பிரியப்படுத்த ஒருபோது விஷயத்தை ஆரம்பித்துப் பின்னர் நிறுத்தக்கூடும். நிற்க; காஷ்மீரிலே பொதுத்தேர்தல் நடத்தமுடிவாயிருக்கின்றது. எக்கட்சியினரும் முன்வந்து அபேட்சகர்களை நிறுத்தலாம். காஷ்மீர் இந்தியாவுடன் சேரவேண்டுமா? அல்லது பாகிஸ்தான் உடன் சேரவேண்டுமா என்பதுபற்றியும் தேர்தற் பிரச்சினைகளில் எடுத்துக் காட்டலாம். இவ்விஷயமாக எவ்வித நிபந்தனைகளும் கிடையா. ஆனால் சமயத் துவேஷங்களைக் கிளப்ப இடம் அளிக்கப்படமாட்டாது. அரசியல் விஷயமாக, பொருளாதார விஷயமாகக் காஷ்மீர் எந் நாட்டுடன் சேர வேண்டுமெனத் தர்க்க முறையாக எடுத்துக்காட்டும் விஷயத்தில் ஆட்சேபங் கிடையாது. இவ் விஷயத்தை விளக்கி ஷேக் அப்துல்லா அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

### நேபாளச் செய்தி

இச்சமஸ்தானத்தில் பிரதமர் நேருவின் முயற்சியின் பேருக இன்னும் சில வாரத்துள் இங்கு நிதானமான அரசியல் நடைபெறச் செய்யப்படும். அரசினர் கட்சியினரும், மந்திரியார் கட்சியினரும் இணங்கிக் கொள்ள முன்வந்தது பாராட்டப்பட வேண்டிய விஷயம். பொதுமக்கள் வசம் நாட்டின் நிர்வாகம் செல்வது சாலவும் சிறந்த செயலேயாகும். மேலும் இராணுவ வீரர்களின் இருப்பிடமாகும் நேபாளம் இப்படியாக அல்லோலப்படின் இந்தியாவின் பெலனும் ஆதிக்கமும் பெரிதும் ஈடாட்டமடையாது போகுமா? விரைந்து இங்கே பொதுத் தேர்தல் நடத்தவும் சனநாயக அரசியல் அமைக்கவும் ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. அதுவரையும் அரசியலை நடத்த ஒரு மந்திரி சபை நிறுவப்படும்.

### உணவுக் கஷ்டம்

என்றுமில்லாத உணவுக் கஷ்டம் இவ் வருடத்தில் ஏற்படுகின்றது. அதைச் சமாளிக்க இந்திய அரசினர் போதிய தற்காப்புக்கள் செய்கின்றனர். இந்தியாவின் பரிதாப நிலையைக்கண்டு அமெரிக்க அரசினர் காலத்தில் உதவி செய்ய முன்வந்துள்ளார். 20 லட்சம் தொன் நிறையுள்ள தானிய வகையை அளிக்க அமெரிக்க அரசினர் உடன்பட்டுள்ளார்.

---

காந்தி மகான் மறைவுக்குக் கண்ணீர் விட்டதுபோல் இந்த உலகம் மற்ற எவருடைய மரணத்துக்கும் கலங்கினதில்லை.

# உலகம் அறியாத அற்புதம்

## காந்தியை நினைக்கச் சாந்தி பிறக்கும்

— ஆஸ்தானகவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை —

காந்தி மகான் சரித்திரம் இதுவரை உலகம் அறியாத ஒரு அற்புதம். கற்பனைகளிலும் அப்படி ஒரு மனிதனை முன்னே கண்டதில்லை. காந்தியடிகளை நினைக்கும்போதெல்லாம் உள்ளம் களிக்கும்; உடலம் சிலிர்க்கும்; கோபம் தணியும்; பாபம் பணியும்; அன்பு பெருகும்; வம்பு கருகும்; அச்சம் ஒழியும்; ஆற்றல் பொழியும்; சாந்தி பிறக்கும்; சத்தியம் சிறக்கும்; அறிவு துலங்கும்; ஆன்மா விளங்கும். கண்கண்ட தெய்வம் காந்திதான் என்று கற்றவரும் மற்றவரும் மெய்மறந்து அவரைப் பின்பற்றினார்கள். சொந்த நாட்டில் மட்டுமின்றி, உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் ஏககாலத்தில் இப்படிக் கீர்த்தி பெற்ற மகா புருஷர் எவருமில்லை. காந்தி மகான் மறைவுக்குக் கண்ணீர் விட்டதுபோல் இந்த உலகம் மற்ற எவருடைய மரணத்துக்கும் கலங்கினதில்லை.

அப்படிப்பட்ட காந்தி இப்படிக் குண்டுபட்டுச் செத்தாரே என்ற ஏக்கம் மட்டும் இருந்துகொண்டே இருக்கிறது. உலகத்தில் ஹிம்சை வழிகளை நீக்கி, அஹிம்சா மார்க்கத்தை நடந்து காட்டவென்றே அவதரித்த காந்தி, எந்த ஹிம்சையை ஒழிக்க வேண்டுமென்று உழைத்தாரோ, அந்த ஹிம்சைக்கே இரையானாரே! கருணை வடிவான காந்தியை ஒரு கயவன் சுட்டுக் கொன்றான். உலகத்தை உய்விக்க வந்தவர் காந்தி என்று நாம் ஒப்புக்கொண்டு வணங்குகிறோம். அந்தக் காந்தியைச் சுட்டுக்கொன்ற அந்த அதமனும் உலகத்தை உய்விக்கத்தான் அவரைக் கொன்றதாகக் கூறினான். எந்தப் பகவத்கீதையைத் தமக்கு வழிகாட்டும் உபதேசமாகக் காந்தி சொல்லிக்கொண்டாரோ, அதே பகவத்கீதையைப் பின்பற்றித்தான் சுட்டுக் கொன்றதாக அவனும் சொல்லிக்கொண்டான். இது என்ன விந்தை! சாகாமல் இருக்கவேணும் என்று நாம் கடவுளுக்குப் பிரார்த்தனை செய்துகொண்ட காந்தியும் செத்துத்தான்போனார். அவரைச் சுட்டுக்கொன்ற கோட்ஸேயும் செத்துத்தான் போனான். காந்தியைப்பற்றி நாம் அடிக்கடி நினைக்கிறோம். அவரை நினைக்கும் போதெல்லாம் அவரைக் கொன்ற இவனையும்தான் எண்ணுகின்றோம்! உலகம் உள்ளளவும் காந்தியின் பேர் மறையாது என்று சொல்லுகின்றோம்.

---

## வடபகுதிக்கு வானொலி?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி விழாவிற்குத் தலைமைதாங்கிப் பேசிய திரு. வே. குமாரசுவாமி எம். பி. அவர்கள், தேசியமானது தனது தலையைத் தூக்கி ஆட்டம் போட்டு நாட்டை இரண்டு கூறாகப் பிரித்துவிட்டு மக்களைக் கஷ்டத்துக்குள் ஆழ்த்திவிடக் கூடாது என எச்சரிக்கை செய்துள்ளார். இக்கூட்டம் ட்றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஏ. எஸ். கனகரத்தினம், வழக்கறிஞர் வி. எஸ். கார்த்திகேசு உட்பட வேறும்பலர் பேசினர்.

### காந்தி ஞாபகம்

யாழ்ப்பாணத்து நகரசபை ஆணையாளர் (கொம்மிஷனர்) திரு. கே. சண்முகம் அவர்களின் பெரு முயற்சியால் யாழ்ப்பாணம் நகரசபையின் ஆதரவிற் சென்ற சனிக்கிழமை (3-2-51) நகர மண்டபத்தில் மகாத்மா இறைவனடி எய்திய புனிததினங் கொண்டாடப்பட்டது. முதலியார் எஸ். சின்னத்தம்பி, வழக்கறிஞர் ஏ. அருளம்பலம் உட்பட வேறும் பலர் சொற்பொழிவாற்றினர்.

திரு. கே. சண்முகம் அவர்களின் பிரேரணையை ஆதரித்த இக்கூட்டம் காந்திஜியின் உருவச்சிலையொன்றை யாழ்ப்பாண நகரில் நாட்டுவதெனத் தீர்மானித்துள்ளது.

### மகாத்மா வீதி

யாழ்ப்பாணத்திலுள்ள மணிக்கூண்டுக் கோபுர வீதிக்கு மகாத்மாகாந்தி வீதி என பல வருடங்களுக்கு முன்னர் பெயர் மாற்றப்பட்டது. இப்போது சில தினங்களுக்கு முன்னர் இவ் வீதியிற் புதிய பெயர்ப்பலகை நாட்டப்பட்டிருக்கின்றது. மகாத்மாகாந்தி வீதி என ஆங்கிலத்தில் மாத்திரம் எழுதினாற் போதாது. தமிழிலும், சிங்களத்திலும் அப்பெயர் எழுதப்படுவது அவசியமாகும்.

### தமிழ்த் திருவிழா

யாழ்ப்பாணத்தில் இவ்வாண்டு எப்பிரல் மாதத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்த் திருவிழா சம்பந்தமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தமிழ்விழா நிர்வாக சபையினர் இம்மாதம் 17-ந் திகதி வரையிற் கொழும்புக்குப் பிரயாணஞ் செய்ய எண்ணியுள்ளனர்.

தமிழ்விழா நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் இம்மாதம் 11-ந் திகதி நடைபெறும்.

### வெங்காய ஊழல்

யாழ்ப்பாணப் பகுதியில் விதை வெங்காயம் விநியோகிக்கும் விஷயத்திற் சில இடங்களிற் கள்ளத்தனம் நடைபெற்று வருவதாகத்தெரிகின்றது. அதிகாரிகளுக்கு இது விஷயம் உடனே அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக இனி ஊழல்கள் நடைபெறாமல் தாம் பார்த்துக் கொள்வதாகவும் இத்தகைய ஊழல்களைத் தவிர்ப்பதற்கு யோசனை கூறுமாறும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### சுன்னாகத்திற் களவு

சென்ற புதன்கிழமை இரவு சுன்னாகம் நாற்சந்திக் கணித்தாகவுள்ள மூலைக்கடைக்குள் கள்வர் கூரை ஓட்டைப் பிரித்து இறங்கிக் களவாடியிருக்கின்றனர். ஒரு கூப்பிடு தொலையில் பொலீஸ் நிலையம் இருக்கத்தக்கதாகவும், பகிரங்க நாற்சந்தியில் சனநடமாட்ட மிருக்கத்தக்கதாகவுமுள்ள இவ்விடத்திற் துணிகரமான இக் களவு நடைபெற்றது பலருக்கும் ஆச்சரியத்தை விளைக்கிறது. இக் களவு சம்பந்தமாக பொலீஸார் தீவிர முயற்சி செய்கின்றனர். அடையாள பரிசீலனைப் பகுதி உத்தியோகத்த ரொருவர் கொழும்பிலிருந்து வந்து கடைக்குளிருக்கும் அடையாளங்களைப்படம்பிடித்துள்ளார்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 5601

1. வேலுப்பிள்ளை கந்தையாவும் பெண்
2. கனகம்மாவும், கொட்டடி — வழக்காளி

1. அந்தோனி சந்தியாப்பிள்ளையும் பெண்,
2. ரோசம்மாவும், நாவாந்துறை, வண். மேற்கு. — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 5601-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1951-ம் வருஷம் பங்குனி மாதம் 10-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 1106-50ம் ரூபா 1000/-க்கு 14-6-49 முதல் 5-8-49 வரை 15% வீத வட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுக்குமவரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு மொத்தம் ரூ. 175-35-ம்

#### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைப் பிரிவு வண்ணார்பண்ணை மேற்கு, இறை பிராயடி பா. நில. இலா. $\frac{3}{4}$. இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு, அந்தோனி தமியானுக்கு உரிய ஆதனம். மேற்கு, அந்தோனி வயித்திக்கு உரிய ஆதனம். தெற்கு, சுவாம்பிள்ளை பெண் ரோசைக்குரிய ஆதனம். இதிற் சொரியலாய் $\frac{1}{3}$ (உள்ளும் புறமும்) வீடும் செய்பயிர்களும்.

S. Ambalavanar
கொம்மிஷனர்

புங்குடுதீவு, 2-5-1951.


[4238]

### ஆசிரியர் பயிற்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய ஆசிரிய மாணவ, மாணவிகளுக்கு வெள்ளை அறிக்கையிற் கண்டுள்ள பிரகாரம் பயிற்சி அளிக்கப்படும். பள்ளிக்கூடத்திலுள்ள பாடங்கள் அனைத்திலும் பயிற்சி பெறவேண்டிய சங்கடம் இவ்வருட ஆசிரியர்களுக்கு இருக்கப்போவதில்லை. இவர்கள் ஏதாவது மூன்று பாடங்களிலேயே விசேஷ பயிற்சி பெறுவார்கள்.

பயிற்சிக்கெனப் புதிதாகத் தெரியப்பட்டவர்களுக்குப் போதிய இடவசதி ஆசிரிய கலாசாலையில் இல்லை. இதனால் இவர்கள் மிகுந்த கஷ்டமடைகின்றனர். அத்துடன் உணவின் தரமும் மிகக் குறைவாக இருக்கின்றதென அறியக்கிடக்கின்றது.




# திருவையாற்றுத் திருவிழா

**திருவையாற்றில் நடைபெற்ற தியாகராஜவிழாவுக்குப் பிரபல கலைவிமர்சகர் இ. கிருஷ்ணஐயர் அவர்கள் விசேஷ அழைப்பின் பேரில் விஜயம் செய்திருந்தார். சென்னையிலுள்ள இக் கலைஞர் சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்து இங்கு நடைபெற்ற கலை விழாவுக்குத் தலைமை தாங்கினார். இலங்கையிற் சகல கலைகளும் வளம்பெறவேண்டுமென்பதில் இப் பெரியாருக்கு மிகுந்த ஆர்வமுண்டு. ஈழகேசரிக்கு இக்கட்டுரையை இவர் விசேஷமாக எழுதியனுப்பியுள்ளார். —ப-ர்.**

ஸ்தல யாத்திரை செய்தால் திருவையாற்றுக்கே போகவேண்டும். பார்த்தால் தியாகராஜ மஹோற்சவத்தையே பார்க்கவேண்டும். நம் நாட்டு நகரங்களிலும், கிராமங்களிலும் உற்சவங்களுக்குக் குறைவில்லை. எனினும் ஜனவரிமாதக் கடைசி வாரத்தில் திருவையாற்றில் நடந்த தியாகப்பிரம்ம மஹோத்ஸவத்துக்கு வேறெதுவும் ஈடாகாது. ஜனவரி 27-ந் திகதி சத்குருவின் 104-வது ஆண்டு ஆராதனைத் தினம். அதற்கு மூன்றின நாள் அதை ஒட்டிய விழாவைக் கனம் இராஜாஜி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அந்த வைபவத்திற் கலந்துகொள்வதற்காக, தென்னாட்டின் பல பாகங்களிலிருந்து வித்வான்களும், ரஸிகர்களும் திரள்திரளாக வந்துகொண்டிருந்தனர்.

தஞ்சாவூர் புகையிரதவீதியிலிருந்துமோட்டார்பஸ்கள் இப்பெருங் கூட்டத்தை 7 மைலுக்கப்பாலுள்ள திருவையாறில் கொண்டுசேர்த்தன. போகும் வழியோ, ஐந்து நதிகள் பாய்ந்து, எங்கு பார்த்தாலும் நெல்வயல்களும் தென்னை, கமுகு வாழைத்தோப்புகளும் ஒரே பசுமையாகக் கண் குளிரக் காட்சியளித்தன.

## மகான் வீடு

திருவையாறு காவேரி நதிக் கரையோரமாய் அமைந்திருக்கும் ஒரு நடுத்தர கிராமம். பெரிதாய்க் கட்டப்பட்டிருக்கும் பஞ்சநதீச்வரர் கோவில் அதன் நடுவில் அக்ரஸ்தானம் வகிக்கிறது. அதைச் சுற்றி விசாலமான ரதவீதிகள் இருக்கின்றன. மூன்னோர்களாற் கட்டப்பட்ட பல பெரிய பொது மாடமாளிகைகள் ஆங்காங்கே ஜனங்கள் வந்திறங்குவதற்கு வசதியளிக்கின்றன. கோவில் தெற்கு வாசலிலிருந்து நதியைப்பார்த்துப் போகும் திருமஞ்சன வீதியில், ஸ்ரீ தியாகராஜர் வாழ்ந்த சிறு வீடு காக்ஷியளிக்கிறது. இச் சிறு வீட்டிலிருந்துதான், உலகம்போற்றும் அம் மகான் கர்னாடக சங்கீதத்துக்குப் புது மெருகு கொடுத்து, ஆயிரக் கணக்கான பாடல்களைப் பொழிந்தார் என்பதை நினைக்கும்போது, அந்தத் தெருவையும் வீட்டையும் பார்த்து பக்தியிலாழ்ந்து வணங்காமல் இருக்க முடியாது.

அவ் வீட்டிலேதான் ஜனவரி 27-ந் திகதி அப் பெரியாரது அண்ணனின் கொள்ளுப்பேரன் குப்புசாமி ஐயர் வைதீக ஆராதனை நடத்தினார். 16 வைதீகப் பிராமணர்களுக்குப் போஜனம், வஸ்திரம் முதலியவைகளை அளித்து, பக்தர்கள் சூழ ஆசிர்வாதம் பெற்றார். அரியக்குடி ராமானுஜய்யங்கார், பல்லடம் சஞ்சீவராவ் போன்ற பல உயர்தர வித்வான்கள், பக்தி சிரத்தையுடன் கூடஇருந்து ஆராதனையை நடத்திவைத்து, தீர்த்தமும், மங்களாக்ஷதையும், பெற்று, பிறகு அங்கேயே போஜனம் செய்தார்கள். அந்த வீட்டைத் தியாகராஜ சபையோரே வாங்கி ஞாபகச் சின்னமாகப் பாதுகாத்து வருகிறார்கள். ஆராதனைச் செலவுகளையும் அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

## சத்குரு சமாதி

கிழாத வீதியிலிருந்து கிழக்கே போகும் பாவா ஸ்வாமித் தெருவில், மகா வைத்யநாதய்யர் வாழ்ந்த வீடு முதல் முதலாகக் காக்ஷியளிக்கிறது. மேலமடவிளாகம் தெருவில் பட்டணம் சுப்பிரமணிய ஐயர் இருந்த வீட்டையும் காணலாம். இப்படிப் பல சங்கீதப் பெரியார்கள் சிறப்பித்தவூரே திருவையாறு என்றால், அதன் பெருமையையும் புனிதத்தையும்பற்றி அதிகம் சொல்லவேண்டியதில்லை. தியாகராஜரின் சமாதி காவிரிக்கரையோரத்தில் அமைந்திருக்கிறது. பக்தசிகாமணி நாகரத்தினம்மாளின் தியாகத்தாலும் முயற்சியாலும் சமாதியைச் சுற்றி ஒரு மண்டபமும், அறைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தச் சமாதிக் கோவிலுக்கு முன்பு சுமார் 150 அடி நீளமும், 120 அடி அகலமுமுள்ளதும் 6000 ஜனங்கள் வீற்றிருப்பதற்குமான பெரியதோர் பந்தலும், சங்கீத மேடையும் அமைக்கப்பட்டிருந்தன.

ஒருபுறம் காவிரி ஆறும் மற்றப்பக்கங்களில் தோட்டங்களுமாக, சுற்றுப்புறமெல்லாம் ரமணீயமாயிருந்தன. பந்தலுக்குள் அடங்காத கூட்டங்களின் சௌகரியத்துக்காக, ஆற்றுமணலில் ஒலிபரப்புக்கருவிகள் அமைக்கப்பட்டுச் சங்கீதக்கச்சேரிகளை காற்றாட அனுபவிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. கச்சேரிகளை வெகுதூரம் இருந்து கேட்பதற்காக, திருச்சி வானொலி நிலையத்தார் செய்திருந்த ஒலிபரப்பு ஏற்பாடுகளும், இரவு வெளிச்சத்துக்காக கும்பகோண நிலையத்தார் செய்திருந்த மின்சார விளக்கு ஏற்பாடுகளும் சிறப்பாயிருந்தன.

## இரசிகர் கூட்டம்

இந்த விசாலமான பந்தலில் அநேகமாகப் பாதி, பொன்மணிகளால் வியாபிக்கப்பட்டிருந்தன. உள்ளேயும், வெளியிலும், சேர்ந்த கூட்டம் பதினைபிரத்துக்கு மேலிருந்திருக்கும். தென்னாட்டுக் கலை வட்டாரங்களில் பழக்கமான வித்வான்கள், ரஸிகர்கள் எல்லோரையுமே அங்கே ஒழுங்காய்ப் பார்க்கலாம். இந்தத் தடவை கனம் இராஜாஜி உற்சவத்திறப்பாளர் என்ப

**இ. கிருஷ்ணஐயர் பி.ஏ.**

தால், முன் வருஷங்களை விட அதிகக் கூட்டம் சேர்ந்திருந்தது. அப்படியிருந்தும், திறப்பு விழா முதல் கடைசிவரை குறிப்பிடத்தக்கதோர் அமைதி நிலவி உற்சவ நிகழ்ச்சிகள் சிறப்பாய் நடந்தேறியது தான விசேஷம். இராஜாஜியின் வாக்குவன்மை உலகப் பிரசித்தம். அப்படியே அவரது திறப்புரையும் இலங்கியது. இத்தனைக்கும் மேலாக அவர் இக்காலத்து ஆடம்பரமத்தியில், மனமார்ந்த பக்தி எவ்வளவு அவசியம் என்று எடுத்துக்காட்டியது ஆணித்தரமாயிருந்தது. திறப்பு விழாவை ஒட்டி முதல்நாள், செம்பை வைத்தியநாதய்யர், ஆலத்தூர் சகோதரர்கள், எம். எஸ். சுப்புலக்ஷிமி, மதுரை மணி, புல்லாங்குழல் ஸ்வாமிநாதபிள்ளை, இவர்களின் கச்சேரிகளும், இரவு சாஸ்வதிபாயின் காலக்ஷேபமும் சிறப்பாயிருந்தன.

## ஆராதனை

27 உ காலை ஆராதனைதான் இந்த விழாவின் முக்கியமான பாகம். அப்போது பிரபலவித்வான்கள் சேர்ந்து தியாகராஜரின் பஞ்சரத்னக் கிருதிகளைப் பாடுவதும், சமாதிக்கு அர்ச்சனை செய்வதும், பக்தர்கள் பிரஸாதம் பெறுவதும் வழக்கம். இதற்குமுன் வருஷங்களில் பெருங் கூட்டத்தின் ஒழுங்குக் குறைவாலும், சந்தடியாலும், மற்றக்காரணங்களாலும், பஞ்சரத்ன கீர்த்தனைகள் சரிவரப் பாடிக்கேட்டதில்லை. அதைப்பற்றி இவ்வருஷம் முன்னதாகவே எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. வித்வான்கள் அதைக்கவனித்துக் கூடியவரை சீர்திருத்திப் பாடினார்கள். அதை இன்னும் சீர்படுத்துவதற்காக, செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யரின் யோசனைப்படி, ஒரு வித்வான் கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டது. இந்தமுயற்சிகளோடு, இராஜாஜியின் பிரஸன்னமும், மொத்தத்தில் சத்குருவின் அருளும் இவ்வருஷத்திய ஆராதனை நிகழ்ச்சிகளைக் கூடியவரை ஒழுங்குபடுத்தின எனலாம்.

## இசைக் கச்சேரிகள்

ஜனவரி 30 உ வரை காலை மாலை, இரவு இம் மூன்று நேரங்களிலும், பலசங்கீதக் கச்சேரிகள் நடைபெற்றன. இளம் வித்வான்களுக்கு 20 நிமிஷம், நடுத்தரப் பட்டவர்களுக்கு அரை அல்லது முக்கால்மணி, பிரபல வித்வான்களுக்கு ஒன்று அல்லது ஒன்றேகால் மணி, இப்படித் தரம் தரமாய் அவகாசம் கொடுக்கப்பட்டது. மொத்தத்தில் அங்கு கேட்ட பெரும்பாலான கச்சேரிகள் தரமாயிருந்தன. சத்குருவின் சந்நிதானம் அதற்கு ஒரு காரணமாயிருந்திருக்கலாம். தவிர சாதாரண சபாக்கச்சேரிகளில் தென்படும் மிகைப்பட்ட அனாவசிய வேலைப்பாடுகளுக்கு அங்கு அவகாசமில்லாததும் மற்றொரு காரணமாயிருந்திருக்கலாம்.

அச்சிட்ட நிகழ்ச்சி நிரலின்படி 100 கச்சேரிகள் ஏற்பாடாயிருந்தன. அவைகளில் குறிப்பிட்டவர்களில் வராத சிலருக்குப் பதிலாக, வந்திருந்த வேறு வித்துவான்கள் பாடினார்கள். எதாகிலும், கச்சேரி மேடை ஒருபோதும் காலியாயிருக்கவில்லை. இக்கச்சேரிகள் ஒவ்வொன்றையும் பற்றி விமரிசனம் செய்ய இயலாது. அப்படிச் செய்ய வேண்டிய அவசியமுமில்லை, ஏனெனில் பாடியவர்கள் தங்கள் பாடல்களை, அவைகளை இயற்றிய சத்குருவுக்கு அர்ப்பணமாகவே வழங்கினார்கள், என்றாலே போதும். மகாராஜபுரம் விச்வநாதய்யர், பல்லடம் சஞ்சீவராவ், அரியக்குடி ராமானுஜய்யங்கார், செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யர், தண்டபாணிதேசிகர், வி. வி. சடகோபன், எம். எல். வசந்தகுமாரி, வீராசாமி முதலிய பிரபலஸ்தர்கள் ஒருபுறம்; முடிகொண்டான் வேங்கடராமய்யர், மாயவரம் கிருஷ்ணய்யர்,

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)


## சிங்களம் இலகுவில் கற்க

எதிர்காலத்திலே தமிழ், சிங்கள பாஷைகள் அரசாங்க பாஷைகளாகும். ஆதலால் தமிழர்களுக்குத் தமிழ் மூலம் சிங்களம் கற்பதற்கு இலேசாக இப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது,

விலை: ரூபாய் 1-00

விலாசம்:

i. Gunasena & Co., COLOMBO.

ii. பண்டிட் கே. வசிரவன்ச அடிகள் போதிராஜ பிரிவேனு இரம்புக்கவை.

[4235]


ஆசிரியருக்குக் கடிதங்கள்

# தலைமைக்காரர் நியமனம்

தலைமைக்காரரை நியமனஞ் செய்யும் விஷயமாகச் சென்றவார ஈழகேசரியில் எழுதப்பட்ட தலையங்கத்தைப் படித்தபோது அதிற் கூறப்பட்டிருப்பன யாவும் நியாயமாகவே எனக்குத் தோன்றின. தலைமைக்காரர்களால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஊழல்களை நீக்க விரும்பிய அரசாங்கம் மீண்டும் பழைய பாதையைப் பின்பற்ற எண்ணியிருப்பது மிகுந்த ஆச்சரியமாகவே இருக்கின்றது.

கிராம நிர்வாகமானது நேரே காரியாதிகாரிகளின் (டி. ஆர். ஓ.) நிர்வாகத்தில் இருப்பதுதான் மிகவும் விரும்பத்தக்கது. காரியாதிகாரிக்கும் கிராமத்து மக்களுக்கும் இடையே வேறொருவர் குறுக்கிட்டு நிர்வாகத்திலே தலையிடுவதாற் கிராம மக்களுக்குப் பலவித கஷ்டங்கள் உண்டாகுமென்பது என் அபிப்பிராயமாகும்.

ஆனபடியால் அரசாங்கம் பழையபடி பகுதித் தலைமைக்காரர்களை நியமிக்கும் திட்டத்தைக் கை விடுவதே ஏற்றது. இது விஷயமாக ஈழகேசரி எடுத்துக்கொண்ட நிலையை நான் போற்றுகின்றேன்.

த. நமசிவாயம்

வண்ணார்பண்ணை,
6.2.51.

— 2 —

'தலைமைக்காரர் நியமனம்' என்ற தலையங்கத்தைச் சென்றவாரம் தங்கள் உயர்ந்த பத்திரிகையிற் படித்து மகிழ்ச்சியடைந்தேன். தங்கள் பத்திரிகை எப்போதும் நாட்டின் நிர்வாகத்தில் அக்கறை காட்டி உழைத்து வருகின்றது. காலத்துக்குக் காலம் நல்ல யோசனைகளையுங் கூறி வருகின்றது.

பகுதித் தலைமைக்காரரை அரசாங்கம் நியமிப்பதிலும் பார்க்கத் தாங்கள் கூறியிருப்பதுபோலப் பெரிய பகுதிகளைப் பிரித்துக் காரியாதிகாரிகளின் தொகையை அதிகரிப்பதே இன்றைய நிலையிற் செய்யத்தக்கது.

கிராமங்களில் ஊழல்களைப் பெருக்குவதற்கு அரசாங்கம் விரும்பினாற் பகுதித் தலைமைக்காரர்களை நியமித்துக் கொள்ளட்டும். நாட்டு மக்கள் குட்டிச் சுவராகுவதைச் சுதந்திரம் பெற்றுள்ள இலங்கை விரும்பாதாயின் தலைமைக்காரரைப் பழையபடி நியமிப்பதைக் கைவிட்டு நாட்டைக் காப்பாற்றட்டும். இது விஷயமாக ஈழகேசரி போன்ற பத்திரிகைகள் சலியாது உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வே. சரவணமுத்து

திருநெல்வேலி

— 3 —

ஈழகேசரி (4-2-51) இதழில் வெளியான தலையங்கம் பலவகைத்தானும் சிறப்புடைத்தாக இருக்கின்றது. புதிய தலைமைக்காரர்களை யுத்த நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந் நாட்களில் நியமிப்பதால் அரசாங்கம் நாட்டுக்குத் தீமையையே உண்டாக்கி விடுகின்றது. இறை அதிகாரிகள் என்று சொல்லப்படும் டி. ஆர். ஓ. உத்தியோகஸ்தர்கள் இந்தப் புதிய தலைமைக்காரர்களுடன் அவஸ்தைப்படவேண்டியே நேரிடும். கிராமத்தில் உள்ளவர்களுடன் தாமே தொடர்பு வைத்துக்கொள்வதையே இறை அதிகாரிகள் விரும்புவார்கள். வேண்டுமாயின் அரசாங்கம் கிராம விதானைக்குப் போதிய சம்பளமும் பிறவசதிகளுஞ் செய்து கொடுத்து அதிகமான வேலை வாங்கலாம். தலைமைக்காரரை நியமித்து நாட்டைப் பாழ்நிலைக்குள் தள்ளிவிடும் யோசனையை அரசாங்கம் ஏன் விரும்புகின்றதோ தெரியவில்லை.

க. சுப்பிரமணியம்

கோப்பாய்

★ 'கொம்மன் வெல்த் கோஷ்டியைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?'
○ 'வாரல் இருக்கின்றானே, அவன் மகா மேதை பாருங்கள்.'
✽ 'மேர்ச்சண்டிலும் பார்க்கவா?'
● 'நாயுடு இல்லாவிட்டால் ஆட்டம் ஆடினாற்போலத்தான்!'

# எல்லாம் வல்ல 'கிரிக்கட்'

○ நடமாடி ○

"ஸ்கோர் என்ன?"

"இது கூடவா தெரியாது! இருபதுதான்! நல்ல படிப்புத்தான் படிப்பிக்கிறீர்கள் உங்கள் பாடசாலையில்! அட கடவுளே! சரியான நாட்டுப்புறம் தான் மாமா நீங்கள்! 'கிரிக்கட் ஸ்கோர்' எவ்வளவென்று கேட்க என்னவெல்லாமோ சொல்லி எங்கள் பாடசாலையைச் சந்திக்கிழுக்கிறீர்களே!

"அடேயப்பா! உனக்குமா இந்தக் கிரிக்கட் பைத்தியம்!" சென்றவாரம் நான் கொழும்புக்குச் சென்றிருந்தபொழுது எனக்கும் பத்து வயது நிரம்பாத என் மருமகனுக்கும் நடந்த சம்பாஷணையே மேற்கூறியவை. கொழும்பில் நின்ற ஒருவாரமும் எனக்குக் கிரிக்கட் பேச்சுக் கேட்டு அலுத்துப்போயிற்று. 'ட்ராம்' வண்டியிலோ, பஸ்களிலோ, புகையிரதத்திலோ பிரயாணம் செய்யும்போது வழக்கமான சம்பாஷணையைக் கேட்கலாம்.

'லேட்டெஸ்ற்' என்ன? என்று கேட்டு வைப்பார் ஒரு கிரிக்கட் பிரியர். "நாலுக்கு நூற்றுப்பத்தொன்பது. இது தேநீர் இடைவேளையின் போது" என்று இன்னொரு கோடியிலிருந்து விடை பகர்வார் இன்னொருவர். "இம்முறை இங்கிலாந்துக் கோஷ்டிக்கு ஜயமிச்சம்தான்." "ஏன் சொல்லுகிறீர்கள், ஹைட் இருக்கும்வரைக்கும் பயமில்லை; அவன் மகா சூரன்காணும்."

"கொம்மன்வெல்த் கோஷ்டியைப் பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?" "வாரல் இருக்கிறானே, அவன் மகா மேதை பாருங்கள்". "மேர்ச்சண்டிலும் பார்க்கவா?" இந்தியக் கோஷ்டியின் 'பீல்டிங்' மகாமோசம்! சீ. எஸ். நாயுடுஇல்லாவிட்டால் ஆட்டம் ஆடினாற் போலத்தான்!" பஸ்ஸை விட்டு இறங்கி நடந்தால் "டைம்ஸ்! ஒப்சேவர்! லேட்டெஸ்ற் ஸ்கோர்" என்று பத்திரிகை விற்கும் பையன் குரல் காதில் ஒலிக்கும். காரியாலயங்களிலோ நாள் முழுவதும் சுடச் சுடப் புள்ளி விபரங்களை அறிவதற்குப் பேசுந் தந்தி அருகிற் காலம் விடுவார்கள் அரசாங்க லிகிதர்மார்.

வெற்றிலைக் கடைக்குச் சென்றால் வெற்றிலை கொடுத்துக்கொண்டே "இம்முறை அமர்நாத் இந்தியக் கோஷ்டியிலில்லை. ஏன் என்று உங்களுக் கேதாவது தெரியுமா?" என்று கேட்பார் அந்தக் கடைக்காரர். ஏதாவது சொல்லியாகவேணும்; இல்லாவிட்டால் அவரின் கேலிச் சிரிப்புக்கு ஆளாகவேண்டும். இப்படியே ஒருவாரம் ஒரே கிரிக்கட் கதை. உலக சமாதானம், கோரியா யுத்தம், அணுக்குண்டு, கொழும்பு வானொலி நியமனம் முதலிய விஷயங்களையெல்லாம் பின்னணிக்கு அனுப்பிவிட்டு முதல் ஸ்தானம் வகிக்கலாயிற்று.

எல்லாம் வல்ல இந்த கிரிக்கட் என்பதென்ன? அதன் பின்னால் இந்த நாகரீக உலகம் எதற்காகப் பறந்தடிக்கின்றது. இதை அறிய நம்போன்ற சிலர் ஆசைப்படுவது இயல்பே. கிரிக்கட் என்பது ஆங்கில நாட்டில் உற்பத்தியான மட்டையடிப் பந்தாட்டமே. அது ஒவ்வொரு பக்கத்திலும் பதினொருவர் கூடி, ஒரு கோஷ்டியினர் பந்தெறிவதும் மற்றவர்கள் அப்பந்தை 'விக்கற்'றில் விழாமல் தடுப்பதுமே யாட்டம்.

இவ்வாட்டம் ஆங்கிலேயர் எங்கள் நாட்டில் விளையாடும் கிட்டி என்னும் விளையாட்டிலிருந்துதான காப்பியடித்தார்களென்பதுதான் சோணாசலம் போன்ற என் அசட்டு நண்பர்களின் அபிப்பிராயம். உற்பத்தி எப்படியிருந்தாலுமென்ன கிரிக்கட் என்ற மட்டையடிப் பந்தாட்டம் அகில உலகும் கண்டானந்திக்கும் ஸ்தானத்தை யடைந்துவிட்டது. இது உண்மை. வெறும் புகழ்ச்சியல்ல. பல அறிஞர்கள் அப் பந்தாட்டம் நேரம் மனித சக்தி முதலியனவை விரயமாக்கிறதென்று அபிப்பிராயம் தெரிவித்தும் கூட ஆங்கிலமக்களுக்கு, ஏன் இந்நாட்டினருக்குங்கூட, அது ஒரு பெரும் மகிழ்ச்சியூட்டும் சாதனமாகவே இருந்துவருகிறது.

கிளித்தட்டு, கிட்டி முதலிய சொந்த விளையாட்டுகளைப் பற்றிப் பத்தி பத்தியாகப் புகழலாம். ஆனால் நம்நாட்டு விளையாட்டிற்கும் ஆங்கில தேசத்து விளையாட்டிற்கும் அடிப்படையில் வித்தியாசமுண்டு.

கிளித்தட்டு, கிட்டி முதலியன செலவில்லாமல் விளையாடக்கூடியனவாயிருந்தும், அதிக பணமும் அதிக நேரமும் செலவுசெய்து மக்கள் இந்தக் கிரிக்கட் ஆட்டத்தை நாடுவதின் இரகசியமென்ன? ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆண்டார்கள். அதனால் அவர்களுடைய விளையாட்டாகிய கிரிக்கட் அதிக மதிப்புடன் பரவுவதியல்பே. அதை விளையாடுபவர்களும் அவர்களால் கௌரவமாகக் கருதப்படுவதும் உண்மைதான். ஆனால் அதையொரு காரணமாகச் சொல்லலாமேயொழிய அதை முழுக் காரணமாகச் சொல்ல வியலாது.

ஒவ்வொரு நாட்டின் விளையாட்டும் அங்கு வதியும் மக்களின் பண்பையே பிரதிபலித்துக் காட்டுகின்றது. எங்களூர் விளையாட்டுகள் எங்கள் நாட்டின் பண்பையொட்டி முதலிலே தனி மனிதனின் திறமையையே வற்புறுத்துகிறது. இரண்டாவதாக எங்கள் விளையாட்டுகளிலே தோல்வியுற்றோர் பாடு அதோகதிதான். பழிக்குப்பழி வாங்குவதுபோல் விதிக்கும் தண்டனையானது தோல்வியுற்ற கட்சியை அவமதிப்பதுமல்லாமல் விளையாட்டினால் உண்டாகும் சந்தோஷத்தை அவர்களுக்கு அதிகரிக்கச் செய்யாது. அதற்குப் பதிலாக அவர்களின் மனதில் துக்கத்தையும் வெட்கத்தையும் மறக்கமுடியாது பழிவாங்கும் நோக்கத்தையும் புகுத்தி விடுகிறது.

இந்த அடிப்படையான பண்பு எங்கள் மக்களில் ஊறிக்கிடப்பதினால் போலும் ஆங்கில விளையாட்டாகிய கிரிக்கட்டாவது உதை பந்தாவது விளையாடினதிலிருந்து எங்கள் ஊர்களிலே கலகங்களுங் கைகலப்புகளும் உண்டாகி வருகின்றன. ஆங்கில நாட்டினரின் விளையாட்டிலும் சரி, அவர்களின் வேறு எந்த முயற்சியிலும் சரி, தனி மனிதனின் திறமையைக் காத்துக் கிடப்பதில்லை. அதில் பங்கு பற்றுவோர்களின் ஏகோபித்த சக்தி முழுவதும் உபயோகிக்கப்படுகின்றது. எந்த ஸ்தானத்தை வகித்தாலும் எல்லாரும் ஏகோபித்து இயங்குவதினால் ஒரு தனி ஸ்தானத்திற்கோ அல்லது தனி மனிதனுக்கோ கௌரவமுண்டாவதில்லை. அத்துடன் வெற்றி பெற்றவர்களும், தோல்வியுற்றவர்களும் உடனுக்குடன் கை குலுக்கி சிற்றுண்டி, தேநீர் அருந்தி நட்புரிமை பாராட்டுவார்கள். வெற்றி பெறுவதனாற் கௌரவமோ, தோல்வியுறுவதனால் அவமதிப்போ அவர்கள் கொள்வதில்லை.

இச்சிறந்த பண்பே அவர்களுடைய விளையாட்டிற்கு அகில உலக மதிப்பைக் கொடுக்கிறது. இவ்விளையாட்டானது உடற் பயிற்சியை மாத்திரங் கொடாது, சமத்துவம் சகோதரத்துவம் ஏகோபித்தியங்கும் தன்மை முதலிய நற்குணங்களை வளர்க்கின்றது.

சுதேசியப் பற்றுள்ள நண்பர்கள் எதைச் சொன்ன போதிலும் மகா உன்னதமானதும் மனிதப் பண்பையுயர்த்தும் சக்தி வாய்ந்ததுமான கிரிக்கட்டும் அதன் சகாக்களும் எங்கள் நாட்டிற்கு அத்தியாவசியகமே. இவ்விளையாட்டு அகிலஉலகத்தோடு எங்கள்தொடர்பையுண்டாக்குவதோடு எங்களுக்கு அரிய பண்புகளையும்ஊட்ட வல்லது.

கிரிக்கட்டும், கிரிக்கட் பைத்தியமும் நீடூழிகாலம் வாழட்டும். அதிருக்கும்வரை அணுக்குண்டோ ஜலவாயுக் குண்டோ எங்களைப் பயமுறுத்த மாட்டா!

## விவேகானந்தர் விழா

### மட்டக்களப்பு

இம்மாதம் 30-ந் திகதி செவ்வாய்க்கிழமை (30-1-1951) ஸ்ரீமத் சுவாமி விவேகாநந்தரின் பிறந்ததின விழாவை மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய மாணவர்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். காலை 9 மணியளவில் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆலயத்தில் குருபூசை ஆரம்பித்தது. இதன் பின்னர் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா அவர்களின் தலைமையிற் பகிரங்கக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையிற் பெரியார்களின் குருபூசை செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் அவர்கள் விவேகானந்தரின் சிறந்த அருள் மொழிகளிற் சிலவற்றை அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டி மாணவர்கள் அவற்றைக் கடைப்பிடித்து நடக்கும்படி வற்புறுத்தினார். செல்வன் சண்முகம், செல்வன் மகாலிங்கசிவம், என்னும் மாணவர்கள் விவேகாநந்தரின் வாழ்க்கையைப் பற்றி நயம் படப் பேசினார்கள். திருவாளர் கா. அருணசல தேசிகர் அவர்கள் மாணவர்களும் ஆசிரியர்களும் இரசிக்கக் கூடிய முறையில் ஒரு சிறந்த சொற்பொழிவாற்றினர். பிரசங்கங்களுக்கிடையே செல்வர்கள் நல்லதம்பி, வேதநாயகம், முருகேசு, சுப்பிரமணியம் ஆதியாம் மாணவர்கள் சங்கீத விருந்தளித்தனர்.

### நாவலப்பிட்டி

நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க மண்டபத்தில் இவ் விழா சனிக்கிழமை (3-2-51) மாலை கூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாயிற்று. சங்க மண்டபம் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்தருணம் விவேகாநந்தரின் வாழ்க்கைத் தத்துவம் பற்றிச் செல்வன் நா. நடேசன், வே. ஸ்ரீராஜேஸ்வரன் என்பவர்கள் சொற்பொழிவாற்றினர். பண்டிதர் க. நவரத்தினம் அவர்கள் பேசும்பொழுது சுவாமிகளின் எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை என்பவற்றை எடுத்துக்காட்டி எதிர்கால இளைஞர்கள் இந்துமத தத்துவத்தை உணர்ந்து சேவை செய்யும்படி கேட்டுக்கொண்டார். சங்கீதபூஷணம் ஸ்ரீ என். இராசு அவர்களால் தோத்திரப்பாடல்கள் பாடப்பெற்றன. சங்கப் போஷகர் திரு க. சுப்பிரமணியம் அவர்களாற் சங்கத்திற்கு அளிக்கப்பட்ட நன்கொடைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

## சேனையூர் கிராம முன்னேற்ற சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

திருக்கொட்டியாபுரப்பற்று மருதடிச்சேனையூர் கிராம முன்னேற்றச் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சனசமூக நிலையத்திற் சமீபத்திற் கொண்டாடப்பட்டது. கிராமச் சங்கத்தலைவர் திரு. கா. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். திரு. கே. வி. இராமநாதன் (டி. ஆர். ஓ.) அவர்களாற் கிராம முன்னேற்றச் சங்கத்தின் பெறுபேறுகளையும் நலன்களையும்பற்றி ஒரு விரிவான சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அதன் பின்னர் கிராமமுன்னேற்றச் சங்க உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

## காந்திஜீக்கு வணக்கம்

### மறவன்புலோ

மறவன்புலோ சகலகலா வல்லி வித்தியாசாலையில் காந்திஜீ சிராத்த தினம் கொண்டாடப்பெற்றது.

செவ்வாய்க்கிழமை (30-1-51) பகல் மகாத்மாஜீயின் திருவுருவப்படம் பல வகை வரிசைகளுடனும் ஊர்வலமாகக் கொண்டுவரப்பட்டு மாலை 7 மணியளவில் பகிரங்கக் கூட்டம் திரு. மா. கந்தையா அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது.

தலைவர் முன்னுரையின் பின் செல்வி க. நாகம்மா அவர்களால் காந்திஜீயின் வாழ்க்கை வரலாறு விளக்கிப் பேசப்பட்டது. பின்னர் திருவாளர்கள்: ம. வேலுப்பிள்ளை, ஆ. கந்தையா என்பவர்கள் காந்திஜீயின் இலட்சியங்களைப் பற்றிச் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். திரு. நா. பொன்னம்பலம் அவர்கள் இக்கொண்டாட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

### கோப்பாய்

கோப்பாய் சூரியோதய சனசமூக நிலைய மண்டபத்திற் கடந்த 30-1-51-ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நிலையத் தலைவர் திரு. க. சின்னப்பு அவர்களின் தலைமையிற் காந்திஜீ சிராத்ததினம் கொண்டாடப்பட்டது.

காந்திஜியின் உருவப்படத்தைத் திறந்து வைத்து மலர் மாலை சூட்டிய பின்னர் தலைவர் பேசினார். மகாத்மாஜி தமக்காக வாழாது பிறர்க்காக வாழ்ந்தாரென்றும்; அவர் அருளிய போதனையைப் பின்பற்றி நடப்பதே நாம் அவருக்குச் செய்யவேண்டிய கைமாறாகுமென்றும் அவரே ஹரிசனரின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக நின்றாரென்றும் அவர் தமது பேச்சிற் குறிப்பிட்டிருந்தார்.

திரு. ஜே. சூசைப்பிள்ளை அவர்கள் அஹிம்சா தர்மம் என்னும் விஷயம்பற்றியும், திரு. என். பொன்னர் அவர்கள் ஒற்றுமை என்னும் விஷயம்பற்றியும், நிலையக் காரியதரிசி திரு. எம். கே. செல்லையா அவர்கள் மகாத்மாவின் சேவை என்னும் விஷயம்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.


## விற்பனைக்கு

**கதிர்காமத்தில் மடம் கட்டக்கூடிய காணி**

மடம் கட்ட மிகப் பொருத்தமான காணி, கதிர்காமம் கந்தசுவாமி கோவிலுக்குப் பக்கத்தில் விற்பனைக்கு உண்டு. வேண்டுவோர் N. கதிரேசசுவாமி, பிறக்டர் S. C., வதுளை என்ற விலாசத்திற்கு எழுதவும்.

[4232 - iii]




அன்பார்ந்த மருமக்களே!

இலங்கை சுதந்திரமடைந்து மூன்று ஆண்டுகள் நிறைவேறிவிட்டன. சென்ற 4-ந் திகதி நான்காவது சுதந்திர தினமாகும். அன்று ஞாயிற்றுக்கிழமையானபடியால் அடுத்த நாளாகிய திங்கட்கிழமை இலங்கையின் பல பாகங்களிலும் இவ்விழா சகல அலங்காரங்களுடனுங் கொண்டாடப்பட்டது.

"ஏறக்குறைய நானூறு வருடகாலம் அந்நியரின் ஆளுகைக்குள் இருந்த எங்கள் சொந்த நாடாகிய இலங்கைத் தீவானது மீண்டுந் தனது பழைய சுதந்திரத்தைப் பெற்று மூன்று வருடங்கள் கடந்துவிட்டன," என எங்கள் பிரதம மந்திரியாரான டி. எஸ். சேனநாயகா அவர்கள் வானொலியிற் பேசும்போது மிகுந்த சந்தோஷத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

பிள்ளைகளே, பிரதமர் சேனநாயகா தொடர்ந்து பேசும்போது கூறியதையுங் கேளுங்கள்: "நாங்கள் எங்களுடைய சுதந்திரத்தைப் பெற்றபோது அது எங்களுக்குப் புதிய ஒரு பொருளாக இருக்கவில்லை. ஏனென்றால், எங்கள் கையை விட்டுப்போன ஒரு பொருளையே நாங்கள் திரும்பவும் பெற்றோம்."

மருமக்களே! சுதந்திரம் மிக அருமையானது; கண்ணின் மணிபோன்றது; இனிமையானதுங்கூட. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தது. தேசபக்தர்கள் சிறைசென்றனர்; உயிரையும் இழந்தனர். காந்தித்தாத்தா காட்டிய அன்பு வழிநின்று இந்தியா சுதந்திரம் அடைந்தது. இன்று குடியரசாக விளங்குகின்றது.

இலங்கை எவ்வித கஷ்டமும் இல்லாமற் சுதந்திரம் பெற்றிருக்கின்றது.

நீங்கள் சுதந்திரத் திருநாளை எப்படிக்கொண்டாடினீர்கள்? எனக்கு விபரமாக எழுதுங்கள்.

கேசரி மாமா

## புதிய மருமக்கள்

கி.431. இ. நிர்க்குணன் 8, றெயில்வே பங்களா, மவுன்ற் மேரி, கொழும்பு 9.

மே.432. க. அன்னபூரணம், ஆர். கே. எம். பாடசாலை, மண்டூர்.

மே.433 மு. சோமசுந்தரம், யூனியன் கல்லூரி. தெல்லிப்பழை.

### பிறந்ததின வாழ்த்துக்கள்
### 11-2-51—17-2-51

கி.168. அ. பாலசுப்பிரமணியம்; மே.195. தி. இராசரத்தினம்; மே.217. லூ. அந்தோனியாள்; கி 340. கே. சொக்கலிங்கம்; மே. 428. ப. இராஜலட்சுமி.

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## மருமக்கள் கடிதம்

அன்புள்ள கேசரி மாமா அறிவது:

எனது வணக்கம். நீங்கள் அனுப்பிய பரிசு கிடைத்தது. அப் புத்தகம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அதை எந்தநேரமும் படித்துப் படித்து மகிழ்கின்றேன். நான் ஈழகேசரி பாலர்பகுதியிற் சேர்ந்து கதைகள் கட்டுரைகள் அனுப்புவதையும், பரிசு பெறுவதையும் கண்டு எனது பள்ளிக்கூட மாணவிகள் பலர் சேர விரும்புகிறார்கள். கு. பத்மாபதி என்பவர் எனது பள்ளிக்கூட மாணவியே. ஈழகேசரி பாலர்பகுதியிற் சேர்ந்தபின் நான் மிகவும் உற்சாகமாயிருக்கிறேன். இ. பேரின்பநாயகம் என்பவர் பரிசுபெற்றோருக்கு நன்றி கூறியதற்காக நானும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் என்னுடன் பரிசுபெற்ற சகோதரி அ. யோகேஸ்வரி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாமாவுக்குச் 'சொக்கலேற்' அனுப்ப நானும் தெண்டித்தேன். எங்களூரில் 'சொக்கலேற்' வாங்குவது கஷ்டம்.

மே.394 த. ஜெயலெட்சுமி
ஸ்ரீ ராமகிருஷ்ணபாடசாலை
மண்டூர், 29-1-51

பிரியமுள்ள மாமாவுக்கு,

ராஜலெட்சுமி அனேக வணக்கம். நான் வெகுநாட்களாக ஈழகேசரியை வாசித்து மகிழ்கிறேன். நான் இன்று அங்கத்தினராகச்சேருகிறேன். எனக்கு வயது பதின்மூன்று. ஆறும் பாரத்தில் படிக்கிறேன். சென்னையில்வசிக்கும் எனக்கு இலங்கையிலும் அன்புஉண்டு.

நான் இங்கு பல பல பத்திரிகைகளுக்கு விடயங்கள் எழுதியுள்ளேன். அகில இந்திய றேடியோவிலும் பாலர் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி வருகிறேன்.

இனி அடிக்கடி கதை, கட்டுரைகள் எழுதி அனுப்புகிறேன்.

மே.428 ப. ராஜலட்சுமி
14, ஜகதீஸ்வர் தெரு
சென்னை 17.

# கண்ணிழந்த கந்தன்

மே.428, ப. ராஜலட்சுமி

'ஐயா! சலாம்; இந்த ஏழைக் குக்காலணுக்கொடுங்கள், உங்கள் வாய்த் தாம்பூலம் என் வயிற்றுச் சோறு;........ ஐயா, இக் குருடனுக்கு இரண்டு காசு போடுங்கள், தர்மப் பிரபுக்களே!'

"போடா, வேலை கெட்ட மிருகமே, சனியன் மாதிரி வந்து நிற்கிறதைப் பார்...... பாருங்க ஸார், எங்கே போனாலும் இந்தப் பிச்சைக்காரத் தொல்லைதான். குருடன் மாதிரியும் நொண்டி மாதிரியும் வேஷம் போட்டுக்கொண்டு வந்து பிச்சைவாங்கிறார்கள். தெரு திரும்பினால் ஜமாயா ஹோட்டலைப் பார்த்து நடக்கணுங்க! இந்தக் காலமே போறாத காலந்தான்."

இத்தனை அவச் சொற்களையும் பொறுத்துக்கொண்ட அந்தப் பிச்சைக்காரன்மீது பச்சாத்தாபம் பிறந்தது. நாங்கள் மஹாபலிபுரத்திற்கு உல்லாசமாகப் பிரயாணஞ்செய்து அச் சிற்பங்களின் அழகை இரசித்துக்கொண்டிருக்கையில்தான் அந்தப் பிச்சைக்காரனைச் சந்திக்க நேர்ந்தது.

"நீ எப்படிக் குருடனாய்?" என வினவினான் என் நண்பன் ஸ்ரீதர். அக் குருடனது திறக்கமுடியாத கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் அவனது ஒட்டி உலர்ந்த கன்னங்களில்வழிந்தோடியது.

"சுட்ட புண்ணிற் கோலிடுவது போல் அவனை இப்படிக் கேட்கிறாயே, பாவம்!"

"பரவாயில்லை ஐயா, யாரிடமாவது எனது துக்ககரமான சரிதையைக் கூறினால்தான் என் மனப் புண் சிறிதாவது ஆறும்" என்றான் அந்தக் குருடன்.

"என்னடா இது? அவனுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுத்துவிட்டுப் பேசுங்கடா! பாவம் சாப்பிட்டு இரண்டு மூன்று நாட்களிருக்கும் போலிருக்கு" என்றான் ஸ்ரீதரன்.

உடனே ராகவனும், ரகுவும் பக்கத்திலிருந்த கடையிலிருந்து, தின்பண்டங்கள் வாங்கிவந்தனர். எல்லாரும் அமர்ந்து சாப்பிட்டோம். அப்பொழுதுதான் அவன் முகத்தைக் கொஞ்சமாவது பார்க்கமுடிந்தது.

அவன் தன் கதையை ஆரம்பித்தான். "ஐயா, என் பெயர் கந்தன்; என் தாய் தந்தையருக்கு நான் ஒரே செல்வ மகன். பாழும் யுத்தம் வந்து என் தகப்பனாரை அங்குபோய்ப் போராடும்படி செய்தது. இன்று வரை என் தகப்பனாரைப்பற்றி ஒரு தகவலும் இல்லை. என் தாயார் சிலகாலம் பலவீடுகளில் வேலை செய்து, கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைத்தாள். ஆனால் என் தந்தையைப் பற்றிய சிந்தையில் மாய்ந்து போனாள். வெகு சீக்கிரமே இனிக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டாம் என்று பரலோகம் போய்விட்டாள்.

"நான் அனாதையானேன். பட்டணம் போய் வேலைதேடலாம் என்று அங்கு போனேன். என் தாய் என்னைப் பத்தாவது வகுப்பு வரை படிக்க வைத்திருந்தாள். ஆனால்........என்ன பிரயோசனம்? நான் மனுச்செய்த இடங்களிலெல்லாம் கையை விரித்துவிட்டனர். ஒரு 'கம்பெனி'யும் விடாமல் ஏறி இறங்கினேன். கையிலிருந்த சிறுதொகையும் என் சக்தியும் கரைந்ததுதான் மிச்சம்!

* * *

ஒருநாள் மத்தியானம் ஜன நடமாட்டமில்லாத ஒரு தெருவில் சோர்வுடன் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஒருவன் மோட்டாரை வெகு வேகமாக ஓட்டிக்கொண்டு வந்தான். 'க்ரீச்'......ஐயோ! அந்தப்பாவி என் மேல் காரை ஏற்றிவிட்டான். ஏற்றியதுதான் ஏற்றினான், எனக்கு உதவி செய்தானா? காரை இன்னும் வேகமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டான். நான் கீழே விழுந்த வேகத்தில் ஒரு கண்ணாடித் துண்டு, கூர்மையான கண்ணாடித்துண்டு, என் கண்களிற் குத்திவிட்டது! பொலிஸார் என்னை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். என் கண்களுக்குப் பார்வை அளிக்க டாக்டர்கள் எவ்வளவோ முயன்றனர். ஆனால்......... என்ன பிரயோசனம்.

"கண்களை இழந்த நான் ஒரு 'பஸ்' சாரதியின் உதவியால் மஹாபலிபுரம் வந்து சேர்ந்தேன். இவ்வமைதியான சூழ்நிலை எனக்குச் சிறிது சாந்தியை அளித்தது. என்றாவது ஒருநாள் இச்சமுத்திரத்தில் விழுந்து இறக்கப் போகிறேன். குறுகிய மனப்பான்மையை உடைய இம் மனித சமூகம் எனக்கு இடம் கொடுக்காவிட்டாலும் இப்பரந்த சமுத்திரம் மறுக்குமா? உங்களைப்போன்றவரைக் காண்பது அரிது என்று இரத்தக் கண்ணீர் வடித்தான், கந்தன்.

நண்பர்களனைவரும் ஒரு தீர்மானத்துக்கு வந்தோம். அவனையும் எங்களுடன் அழைத்துச் சென்று, குருடர் வதியும் ஆச்சிரமத்திற் சேர்த்தோம். இன்றும் நாங்கள் ஒவ்வோர் விடுமுறைத் தினத்திலும் அவனைப் போய்ப் பார்க்கத் தவறுவதில்லை. ஆசிரம வாசிகளின் அன்பினால் கந்தன் சாந்தியுடன் விளங்குகிறான்.

# வீட்டிற் குதூகலம்

மே.286, இ. இராஜேஸ்வரி

பட! பட! பட்! பட! பட்! என்ற ஓசை என் நித்திரையைக் குழப்பிவிட்டது. எங்கும் ஒரே வெடிச்சத்தம். 'படீர்' என்னும் பட்டாசும், 'சுர்' என்னும் சீறு வாணமும், 'டோம்' என்னும் கப்பல் வெடியும் அன்று பொங்கற் பண்டிகையென்பதை மக்களுக்கு ஞாபக மூட்டின. அடேடே! இன்று தமிழரின் சிறந்த பொங்கற் பண்டிகையல்லவா? என்று கூறிக்கொண்டே தலைமாட்டிலிருந்த பட்டாசுக் கட்டுகளுடன் தெருவாசலை நோக்கி நடந்தேன். அயல்வீட்டு அம்பலவாணனும் முன்வீட்டு முருகனும் பின்வீட்டுப் பிச்சுவும் தங்கள் பட்டாசுக் கட்டுகளுடன் வந்தனர். நாங்கள் அனைவரும் பட்டாசுகளைக் கொளுத்துவதில் நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தோம்.

பின்னர் தெருக் கோடியில் நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டிருந்த என்னை "இராஜம், பால் பொங்குகிறது! வந்து பார்" என்று அம்மா அழைத்தார். வீட்டினுள் ஓடிப்போய் எஞ்சிய பட்டாசுகளையும் கொளுத்தினேன்.

மணி பன்னிரண்டு அடித்தது. வீட்டு 'ரேடியோ'வில் பொங்கல் பாட்டுகள் ஒலிபரப்பப்பட்டன. பொங்கலும் ஒருவாறு நிறைவேறியது. நாமெல்லோரும் பொங்கற் சாதம் சாப்பிட்டோம். பின் ரேடியோவில் பொங்கலுக்காக ஒலி பரப்பப்பட்ட விசேஷ நிகழ்ச்சியைக் கேட்டுக்கொண்டும், அன்று எனக்கு வந்த பொங்கல் வாழ்த்துக்களை வாசித்துக்கொண்டும் நேரத்தைப் போக்கினோம். சாயங்காலம் பிள்ளையார் பூசையும் நிறைவேறியது.

வாசலில் மணியோசை! பேப்பர்க்காரன் வந்துவிட்டான். ஓடிப்போய் ஈழகேசரியை வாங்கிப் பாலர் பகுதியைப் புரட்டினேன். என்ன ஆச்சரியம்! நான் எழுதிய 'பொங்கற் பண்டிகை' என்ற கட்டுரை பாலர் பகுதியில் கேசரிமாமாவால் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மாமாவை மனமார வாழ்த்திக்கொண்டே கட்டுரையைப் பெற்றோருக்கு வாசித்துக் காட்டினேன். எல்லாருக்கும் ஒரே குதூகலமாக விருந்தது.

## அதிசயக் கண்ணாடி

குளிர்ப்பிரதேசங்களிற் சூரிய கிரணங்களைக்கொண்டே வீடுகளை உஷ்ணமாக்குவதற்கான ஒரு அதிசய கறுப்புக் கண்ணாடி அமெரிக்காவிலே தயாராகியிருக்கிறது. அமெரிக்க விஞ்ஞான நிபுணர்கள் கழகத்தின் 42-வது வருடாந்தரக் கூட்டத்தில் இக் கண்ணாடியைப் பற்றியும் நிபுணர்கள் விளக்கிக் கூறினார்கள்.

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

...........................................

பிறந்ததிகதி:...........................................

...........................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

# இதய ஊற்று

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுக்கி இழுத்துப் பிடித்துக் கொண்டார். பொன்னர் மூன்று பக்கஞ் சுற்றி இழுத்துக் குதித்தார். அந்நேரம் பொன்னரின் அரையிற் சேலை அவிழுமாயிருந்தால், பொன்னர் முற்பக்கமாய்க் குப்புற விழ, அவர் மனைவி பிற்பக்கமாய் மல்லாந்து விழுவாள். பொன்னர் நாடகம் ஆரம்பிக்க முன்னர் தனது வேட்டியை இறுக்கமாகக்கட்டிக் கொண்டார் போலும்.

பொன்னரின் மனைவி வாய் விட்டு அழத் தொடங்கவே, அதன் மேலும் அக்காட்சியை மகாதேவனுற் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. மகாதேவன் அவ்விடஞ் சென்று பொன்னர் மனைவியை விடுவித்து, அவளின் வேலையைத் தான்செய்தான். பழக்கமில்லாதவன் முரட்டுத்தனமாகச் செடிலைப் பிடித்தது போல, மகாதேவன் பிடித்த பின்னர் பொன்னரால் அவ்வளவு ஆட முடியவில்லை. பொன்னர் ஆட்டம் வசதிப்படாமற் போகவே கதையிலே தொடங்கினர். மகாதேவனும் லலிதாவும் அவர்களின் கதைகளை விசாரித்து இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பினர். இரண்டாவது முறையாகவும் இப்படி ஒருநாள் நடந்தது. மகாதேவனும் லலிதாவும் பிடிப்பார்கள் என்ற எண்ணத்தினுற் போலும் பொன்னர் தனது நாடகத்தை நடாத்தி வந்தார்.

ஒருநாள், மகாதேவன் சைக்கிளில் நிலாவரைக்குச்சமீபத்தில் வரும்பொழுது, பொன்னரும் அவர் மனைவியும் காவடியாட்டத்தோடு நிலாவரைக்கருகே வென்றனர். பொன்னர் நிலாவரை விளிம்பிலே நின்றார். அவர் மனைவி அப்பால்நின்று இவரை இழுத்துக்கொண்டு நின்றாள். பொன்னர் தான் நினைத்தபடி தனது மனைவியின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியும். விடுவித்துக்கொண்டால் நிலாவரைக்குள் விழ வல்லவா வேண்டும். அதல்லவே அவருடைய நோக்கம்.

மகாதேவன் சைக்கிளைவிட்டு இறங்கினான். அவன் இனித் தன்னை விலக்க மாட்டான் என்பது பொன்னருக்குத் தெரியும். மகாதேவன் பொன்னரைத் தான் பிடிப்பதற்கு அவருக்குச் சமீபத்திற் போனுன். மகாதேவன் பிடிப்பதற்கும் பொன்னரின் மனைவி கை விடுவதற்கும் இடையில் ஒரு சோர்வு ஏற்படவே, அந்த நேரத்திலே தெரியாத் தனமாகப் பொன்னர் பலமாய் இழுத்தார். அடுத்த கணம் பொன்னர் நிலாவரைக் கிணற்றுக்குள் சுழன்று கொண்டு போனர். பொன்னரின்மனைவி 'ஐயோ!' என்று அலறிக்கொண்டு தானும் விழப் போனாள். மகாதேவன் அவளை விழவிடாமல், அவளின் பின் தொங்கற் சேலையைப் பிடித்துக் கொண்டான். மரணத்துக்குப் போகிறேன் என்று தனது மானத்தை விட்டுக் கொடுக்கப் பெண் மனம் விரும்பவில்லை. ஒரு பட்டுக் குஞ்சத்துடன் மேலே இழாமல் நின்றுள். இந்த நிலையில் லலிதாம்பாள் அவ்விடம் வந்து சேர்ந்தாள்.

'இந்த நிலாவரைக் கிணற்றைப்போல் உங்கள் நெஞ்சமும் ஆழங்காண முடியாதது.'

'அதெல்லாமில்லை; நிலாவரைக் கிணற்றின் ஆழமெல்லாம் அளந்து அடி அங்குலத்தில் வைத்திருக்கிறார்கள். ஆழம் பார்க்க என்னுடைய நெஞ்சில் ஒரு சிறு குழிகூட இல்லை; வேண்டுமானுல் பார், என்றுசட்டையைக்கழற்றினுன்.

'போதும் உங்கள் பரிகாசம்; வாருங்கள் போகலாம்' என்று லலிதா சைக்கிளை எடுத்தாள். இருவரும் பேசிக்கொண்டு சென்றனர். லலிதா ஆழ்ந்த சிந்தனையுடனே தனது விடுதிக்குச் சென்றுள். மகாதேவன் தன்னைக் காதலிக்கிறுனு? இல்லையா? என்பது அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவளுடைய மனதிலோ எந்நேரமும் மகாதேவனின் உருவம் மறையாமலிருந்தது; அவனுடைய அகன்ற மார்பும், உயர்ந்த தோற்றமும், கள்ளங்கபடமற்ற முகமும் அவள் மனத்தில் அடிக்கடி தோற்றி என்னவோ செய்தது. அவனை மாத்திரம் விவாகஞ் செய்துவிட்டால், தான் அடைய வேண்டியனவெல்லாம் அடைந்ததற்குச் சரி என்று அவள் நினைத்தாள். ஆனுல் அவனுஞ் சம்மதித்து, விவாகமும் நடைபெறுவது இலகுவான காரியம் என்று அவள் நினைக்கவில்லை. தெய்வம் உதவி செய்தாலன்றித் தனது சக்தி போதாதென்பது அவள் எண்ணம்.

தன்னை எத்தனையோ வாலிபர்கள் காதலிக்க முன்வந்தும், தான் இடங்கொடாததுபற்றியும், மகாதேவன்மீது தன்னையுமறியாது தனது மனம் மயங்கியதை நினைத்தும் தனக்குள் அவள் பெரிதும் ஆச்சரியப்பட்டாள். தான் இனி மணஞ்செய்தால் மகாதேவனை; இல்லையேற் செய்வதில்லை. என்று தன் மனத்துள் உறுதியாக நினைத்துக்கொண்டாள். எதற்கும் மகாதேவன் அசையாத மனிதனுக இருக்கிறுனே என்று அங்கலாய்த்தாள் ஆனுல் முன்பிருந்ததிலும், இப்பொழுது நிலைமை வளர்ந்துவருகிற தென்பது அவளுக்குத் தெரிந்தது. அந்தச் சிறு அனுகூலத்தைத்—தென்பை—சிறு துரும்பைப்—பிடித்துக் கொண்டு அமைதியடைந்தாள்.

மகாதேவன் செல்லும்பொழுது இன்று குருவைக் கேட்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு சென்றுன். விசுவநாத சாஸ்திரிகள் சம்மதிக்க மாட்டாரென்றும் மகாதேவனுக்கு ஓரளவு தெரியும். வைதிக குடும்பத்திற் பிறந்த அடக்க ஒடுக்கமான பெண்ணென்றுல் ஒருவேளை விசுவநாதசாஸ்திரிகள் சம்மதிப்பார். காரும், சைக்கிளும் ஓடும் பெண்ணென்றுல் விசுவநாத சாஸ்திரிகள் தாத்தி அடிப்பார். பிடிவாதமாக 'அவளைத்தான் செய்வேன்' என்று சொல்லவேண்டுமென்று நினைப்பான். ஆனுல் விசுவநாத சாஸ்திரிகளை நேரிற் கண்டதும், அவரைக் கேட்க அவனுக்குச் சிறிதளவு துணிவு தானும் ஏற்படவில்லை.

'என்ன மகாதேவன், நீ இப்பொழுது வருகிறது வரப் பிந்துகிறது' என்று விசுவநாத சாஸ்திரிகள் கேட்டார். மகாதேவன் என்ன சொல்வதென்று தெரியாது விழித்தான். உடனே சமாளித்துக்கொண்டு, 'கந்தோரில் இப்பொழுது அதிக வேலை. அவ்வளவையும் செய்துமுடித்து வரவேண்டியிருக்கிறது. என்ன செய்வது?' என்று சொன்னுன். முதன்முதல் தனது குருவுக்குப் பொய் சொன்னுன். இந்த முதற்பொய் சொல்ல உண்மையில் அவன் கூசினுன். அடுத்தடுத்த பொய்கள் அவனுக்கு விரைவில் வந்தன. பின்னர் அவன் தனது குருவுக்குப் பொய் சொல்லப் பின் நின்றதேயில்லை.

அடுத்தநாள், லலிதா, இன்று மகாதேவனை ஒரு முடிவு கேட்கவேண்டுமென்ற தீர்மானத்துடனே வந்தாள். நிலாவரைக்கருகில் ஆசமரத்து நிழலில் எதிர் எதிராக இருபாருங் கற்களில் இருவரும் இருந்தனர். மெல்லிய தென்றற் காற்றுச் சுகமாக வீசிக்கொண்டிருந்தது. 'என்னை விவாகஞ் செய்கிறீர்களா?' என்று பச்சையாகக் கேட்கவேண்டுமென்று அவள் எண்ணியிருந்தாள். இதைக் கேட்கவேண்டுமென்ற பரபரப்பினுல், அவள் முகமும், கண்ணும் புத்தழகுடன் விளங்கின. என்ன பதில் சொல்வாளோ என்ற ஒரு திகிலும் அவள் மனதில் குடிகொண்டிருந்தது. ஒரு மாதிரிமென்று விழுங்கி லலிதா கேட்டாள்:

'உங்கள் கருத்தென்ன?'

'நீ கேட்பது எனக்கு விளங்கவில்லை'

'நீங்கள் யாருக்கும் கடமைப்பட்டிருக்கிறீர்களா?'

'நான் இவ்வுலகில் இறைவன் ஒருவருக்குத்தான் கடமைப்பட்டிருக்கிறேன்'

'நீங்கள் யாரையும் விவாகஞ் செய்துகொள்ளத் தீர்மானித்திருக்கிறீர்களா?'

'நான் விவாகம் என்ற விஷயத்தைப் பற்றி நான்கு ஐந்து வருஷங்களுக்குநினைப்பதில்லை என்று எண்ணியிருக்கிறேன்'

லலிதாவால் அவனுடைய கதையின் போக்கு பொறுக்க முடியாதிருந்தது. 'என்னை விவாகஞ் செய்வதில் உங்களுக்கு ஏதும் தடை இருக்கிறதா?'என்று நேரே கேட்டாள்.

மகாதேவன் சிறிதும் அசையாமல் 'அதுதானே சொன்னேன்; விவாகத்தைப்பற்றி நான்கு ஐந்து வருஷங்களுக்குச் சிந்திப்பதில்லையென்று.'

'நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?' என்று விடாது கேட்டாள்.

'காதலுக்கும் விவாகத்திற்கும் ஒரு சம்பந்தமுமில்லையா?'

'அப்படியானுல் நீங்கள் என்னைக் காதலிக்கவில்லையா?'

'நீ என்னைக் காதலிக்கிறுய் போலிருக்கிறதே?'

'போலிருக்கிறதா? என்னை எத்தனை பேர் காதலித்தார்கள்; கடிதங்கள் எழுதினுர்கள். ஒருவர் பாலும் என் மனஞ் செல்லவில்லை. உங்களைக் கண்டவுடனேயே என் மனம் என்னையறியாமல் உங்கள்மீது படிந்து விட்டது.'

'உனது பொல்லாத காலந்தான் அத்தனை பேரையும் விட்டு என்மீது உன் உள்ளம் திரும்பியது.'

'அப்படியானுல் என்னை நீங்கள் கைவிட்டு விட்டீர்களா?'

'நான் உன்னைப் பிடித்திருக்க வில்லையே'

உடனே நீரில் 'களுக்' என்று சத்தம் கேட்டது. லலிதா நிலாவரைக்குள்.

மகாதேவனும் அவளைத் தொடர்ந்தான். உண்மையில் மகாதேவனுக்கு நீந்தத்தெரியாது. 'தனக்கு நீந்தத் தெரியும்' என்று முன்னர் பொய் சொன்னுன். — தொடரும்

## அத்தியாயம் 7

# காதல் உள்ளத்தின் ஆழ நீளம்!

'கரையில் நின்று சும்மா நீந்தப் பழகிவிட்டு நடுக்குளத்தில் இறங்கலாமா? அதேபோலத்தான் வாழ்க்கையும். இதன் ஆழ நீளந் தெரியாமற் காலை வைப்பவர்கள் பலர்.'

—அன்பக்கேணி

லலிதாம்பாளுக்கு மகாதேவனையும், பொன்னரின் மனைவியையும் பார்க்க முதலிற் சிரிப்பு வந்தது. பெண்களைத் திரும்பிப் பாராத மனிதன் இப்பொழுது நிற்கும் நிலையைப் பார்த்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது. அடுத்த கணம் நிலவரங்களை அவள் ஊகித்துக்கொண்டாள். அவளும் சேர்ந்து பொன்னரின் மனைவியைப் பிடித்துக்கொண்டாள். அவர்கள் இருவர் பிடிக்குள் நின்று குத்திமுறிந்தாள். அடுத்த கணம் மூவரும் நிலாவரைக்குள் விழுந்த பொன்னரின் கதியென்னவென்று அறிய விரும்பினர். மகாதேவன் முதலில் நிலாவரையை எட்டிப் பார்த்தான்.

பொன்னர் வெகு லாவகமாக, நீந்திக்கொண்டு கரையை நோக்கிப் போனுர். அவர் இவர்கள் நிற்குமிடத்திற்குப் போகாமல், தனது வீட்டை நோக்கிப் போனுர். இவர்களுக்குச் சிரிப்பு அடக்க முடியவில்லை. இவர்களின் சிரிப்பொலி கேட்கக் கேட்கப் பொன்னர் வேகமாக நடந்து போனுர். பொன்னரின் மனைவியும், அவரைப் பின்பற்றி நடந்தாள்.

'உங்களுக்கு நீந்தத் தெரியுமா' என்று லலிதா கேட்டாள்.

'ஓம்' என்று மகாதேவன் சொல்லிவிட்டு, 'ஏன் கேட்கிறுய்' என்று கேட்டான்.

'அவளை நீங்கள் இறங்கி நீந்திக் கரை யேற்றலாம் என்ற துணிவினுற்றுன், நிலாவரைக்குள் விழவிட்டிருக்கிறீர்கள்' என்று சொல்லிச் சிரித்தாள்.

'இன்றைக்கு நிலாவரைக்குள் விழப்போகிறேன் என்று சொல்லிச் சொல்லி அவளைப் பயப்படுத்துவதும் நின்றுவிடும்' என்று மகாதேவன் சொல்லிச் சிரித்தான்.

'இனி நான் உங்களைப் பயப்படுத்தப் போகிறேன்.'

'என்ன மாதிரி'

'நிலாவரைக்குள் விழப் போகிறேன் என்றுதான்'

'நீ நிலாவரைக்குள் விழுந்தால் அதற்காகக் கவலைப்படுகிறவர்களையல்லவா, நீ பயப்படுத்தலாம்'

'நீங்கள் கவலைப் படமாட்டீர்களா?'

'நாங்கள் இப்பொழுது தம்பதிகள் அல்லவே'

இப்பொழு இல்லாவிட்டாலும், பின்பு .......'

'நிலாவரைக்குள் விழுந்த பின்னரா?'

NOTICE OF APPLICATION

IN THE DISTRICT COURT OF JAFFNA

**No. 1255**

Notice is hereby given that after the expiry of fifteen days from the date hereof application will be made to the District Court of Jaffna under the British Courts Probates (Re sealing) ordinance for the sealing of probate of the Will in rsepect of the Estate of Ayampillai Nannithamby alias Vaitilingam late of Kuala Lumpur in Malayan Union deceased granted by the Supreme Court of Kuala Lumpur on the 10th,day of January, 1950.

This 31st, day of January 1951

T. Kumaraswamy

*Proctor for Applicant*

[4234]

யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா ,34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை :
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்று வரவு:
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள் :
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன் :
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறாப்பர்

[4222]

The EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India Burma & Malayan Union

Vol. 21 | Chunnakam, Sunday, Feb., 11. 1951 | No. 28



சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6·00
மலாயா — $ 6-00
தனிப் பிரதி சதம் 10. காசு 10


# திருவையாற்றுத் திருவிழா

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கார், பிருந்தா முக்தா சகோதரிகள், கல்யாண கிருஷ்ணய்யர், சித்தூர் சுப்ரமணியபிள்ளை முதலிய ஞானஸ்தர்கள் மற்றும் பல இளம்வித்வான்கள் மற்றொருபுறமாக அவரவர்களுக்குரிய பக்கமேளங்களுடன் செய்த கச்சேரிகளும், அண்ணுசாமி பாகவதர் காலக்ஷேபமும் மற்றநான்கு நாட்களில் சிறப்பாயிருந்தன. உற்சவப் பந்தலைச் சங்கீதவெள்ளத்தால் நிரப்பின என்றாலே போதும். கடைசிநாள் ஆஞ்சநேய உற்சவத்துடன் கலைவிழா சிறப்பாய் முடிந்தது. அதைப்பற்றி அதில் பங்கெடுத்துக்கொண்ட வித்வான்களையும், நிர்வாகிகளையும் பாராட்டுகிறோம்.

இதன் நடுவில் சில பிரபல வித்வான்கள்கூடித் தியாகராஜ கிருதிகளின் பாடாந்தரங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், இன்னும் வெளிவராதவைகளைத் தேடி எல்லாவற்றையும் அதிகார பூர்வமாய் அச்சிட்டுப் பிரசுரம் செய்வதற்கும், முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதை மெச்சுகிறோம். மொத்தத்தில் கனம் இராஜாஜி கூறியபடி, இந்த உற்சவம் வேறெங்குமில்லாத கலைப்பெரியாரின் ஞாபகச்சின்னமாகக் கொண்டாடப்படும் காக்ஷியாயிலங்கியது.

## சீர்திருத்தங்கள்

இந்த உற்சவ வழக்கம் வெகுகாலமாய் ஏற்பட்டு, பல இடுக்கண்களைச் சமாளித்து, வருஷாவருஷம் பெரியதாய் வருகிறது. இது இனித் தென்னாட்டாரின் கவனத்துடன் மாத்திரம் நிற்க முடியாது. வடநாட்டாரோடு, வெளிநாட்டாரின்கவனத்தையும்கவரும் காலம் வந்துவிட்டது. இந்த உற்சவத்திற்கே சில மேல்நாட்டார்கள் வந்திருந்தார்கள். கூட்டமோ வருஷாவருஷம் பெருகிவருகிறது. தியாகராஜரோ, இப்படிப் பின் காலத்தில் வரப்போகும் பெருமையை எதிர்பார்த்துத்தன் வாழ்வை, நடத்தவில்லை; பாடல்களைப் பொழியவில்லை. வாழ்வு முழுதும் பக்திபரவசமாகவே பாடல்களைப் பொழிந்தார். தமது இஷ்ட தெய்வமான இராமபிரானுக்கே அர்ப்பணம்செய்தார். எனவே, அவரது ஞாபகச் சின்னமாக ஏற்படும் எதுவும் பக்தியையே பிரதானமாகக் கொண்டிருக்கவேண்டும். கூட்டப் பெருக்கிலும், ஆடம்பர வளர்ச்சியிலும், இந்த அடிப்படையான பக்தி அம்சம் தளரவிடக்கூடாது. இதுவே பக்த சிகாமணி நாகரத்தினம்மாளின் அபிப்பிராயம். இதை நன்குணர்ந்து உற்சவத்தைச் சமாளிக்க ஏற்பாடுசெய்வதில் நிர்வாகிகளுக்குப்போதிய கவனமும், மற்றவர்களுடைய ஒத்துழைப்பும் போதியவாறு வரவேண்டும். இப்போதைய நிலைமையில், உற்சவ நிர்வாகத்துக்கான சபை இருந்தபோதிலும், நிர்வாகப்பொறுப்பு, பெரும்பாலும் இரண்டொருவர் தலையிலேயே விழுந்திருப்பதாகத் தெரியவருகிறது. அந்த இரண்டொருவரே உற்சவ ஏற்பாடுகள் எல்லாவற்றையும் போதியவாறு கவனிக்க இயலாது. செல்வாக்குள்ள மற்ற அங்கத்தினரும், பிரபல வித்வான்களும் தாராளமாய் முன்வந்து உதவவேண்டும். பணவசூல், பந்தல், கச்சேரி நிகழ்ச்சிநிரல்கள், விஜயம்செய்யும் வித்வான்களைக் கவனித்தல், அவர்களுக்கான் போஜனம், விடுதி, ஆராதனை நிகழ்ச்சிகள், சபை ஒழுங்கு முதலிய பல பகுதிகள் ஒவ்வொன்றையும் நன்கு கவனித்துக் கொள்ளுமாறு, இரண்டு மூன்று பேர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். இப்படி நிர்வாகிகள், உற்சவ ஆரம்பத்துக்கு நாலுநாள் முன்னதாகவே திருவையாற்றில் கூடிக் கலந்து ஆலோசித்து ஏற்பாடுகளைத் திட்டப்படுத்தவேண்டும்.

## இளம் வித்துவான்கள்

தவிர, இளம் வித்வான்கள் உற்சவத்தின் நோக்கத்தை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். இந்தத் தடவை, கச்சேரிசெய்ய விரும்பிய பலருக்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தும், நிகழ்ச்சிநிரலின்படி பலர் வரவில்லை. சிலருக்கு அசௌகரியமாயிருந்திருக்கலாம். ஆனால் பல இளம்வித்வான்கள் மாலைக்கச்சேரிகளில் தங்களுக்கு இடம் கிடைக்கவில்லையென்றும், காலை பிற்பகல் கச்சேரிகளில் பாடினால் கௌரவமில்லையென்றும் நினைத்து குறிப்பிட்ட நேரங்களில் வரவில்லை. உற்சவக்கச்சேரிகள் சாதாரண சபைக் கச்சேரிகளைப் போலல்ல. அவரவர்களுக்குக் கிடைத்த நேரத்தில், சில கிருதிகளைச்சத்குருவுக்கு அர்ப்பணமாகப் பாடி அருள்பெறுவதற்காக ஏற்பட்டிருக்கிறதே தவிர வேறில்லை. அங்கு மாலைக்கச்சேரிகளில் பாடினால்தான் பெயரும் புகழும் வந்துவிடும் என்பதற்காக இல்லை. பிரபல வித்வான்களைக் காலையிலும், பிற்பகலிலும் பாடச் செய்யலாம். ஆனால் அவர்களுக்கு முன்னும் பின்னுமாக இளம் வித்வான்களைப் பாடச் செய்தால், பின்னவர்களின் கச்சேரிகளைக் கூட்டம் ரசிப்பதில்லை என்பது நன்கு தெரியவந்தது. இளம் வித்வான்களின் கச்சேரிகளை ரஸிப்பதற்கென்றே கூட்டத்தின் ஒரு பாகம் எந்த நேரத்திலும் இருக்கிறது. இளம் வித்வான்கள் அவர்கள் முன்னிலையில் பாடினால் போதும்.

எவ்வளவோ சிரமங்களைச் சமாளித்து இவ்வருஷ உற்சவத்தை வெற்றிகரமாய் நடத்திய நிர்வாகிகளான காரியதரிசிகள், முசிரி சுப்பிரமணிய ஐயர், வீராசாமிப்பிள்ளை, பொக்கிஷதார், சத்யமூர்த்தி, ஸி. ஆர். ராமச்சந்திரன் முதலியவர்களுக்கும், ஜில்லா அதிகாரிகளுக்கும், முக்கியவித்வான்களுக்கும், கலையுலகம் வந்தனமளிக்கிறது. இவ்வருஷத்திய அனுபவங்களை மனதிற் கொண்டு, பின் வருஷங்களில் உற்சவத்தை இன்னும் சிறப்பாய் நடத்த முயற்சிசெய்வார்களென்று நம்புகிறோம்.

## இந்தியர் உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யங்களை விறுவினர்களா? எந்த விதமான தர்ம காரியங்களையும் அவர்கள் செய்யவில்லை. அப்பணத்தை அப்படியே இந்தியாவுக்குக்கொண்டுவந்து இங்குள்ள காணி பூமிகளையெல்லாம் பொல்லாத விலைகொடுத்து வாங்கினர்கள். பெரிய பெரிய முதலாளிகளாக மேன்மேலும் திரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். இதன்மூலம் இவர்கள் இலங்கையிலும் தாய்நாடாகிய இந்தியாவிலும் ஒரே சுரண்டல் வேலையையே செய்கின்றார்கள். இது எல்லாம் முதலாளித்துவத்தின் செய்கையே. இவர்கள் இலங்கையிலே திரட்டிய பணத்தில் ஒருபகுதியையாவது அந்நாட்டின் ஆக்க வேலைகளுக்கு உபயோகிக்க வேண்டாமா?

இப்படியான போராசை பிடித்த அட்டூழியத்துக்குச் சிகிச்சை அவசியமெனஎண்ணி இலங்கை அரசாங்கமும் என்னென்னவோ சட்டம் எல்லாம் போட்டுப் பார்க்கிறார்கள். அநியாயம்! இந்த முதலாளித்துவத்தினுடைய செய்கையானது அந்த நாட்டிலுள்ள இலட்சக் கணக்கானஏழைகளை—பாவம் ஒன்றும் அறியாத தோட்டத்தொழிலாளர்களை—வதை செய்து பழி வாங்குகிறது. இலட்சக்கணக்கான அத் தொழிலாளர்களைக் கடவுள்தான் காப்பாகற வேண்டும்.

## சுதுமலை இளைஞர் சங்கம்

சென்ற சனிக்கிழமை (3-2-51) மாலை சுதுமலை தண்ணீர்க் குண்டடியில் நடைபெற்ற கூட்டத்திற் சுதுமலை இளைஞர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. கே. இராசதுரை; காரியதரிசி: திரு. எஸ். மயில்வாகனம்; தனாதிகாரி: திரு. எஸ். நாகராசா; உப தனாதிகாரி: திரு. எம். பத்மநாதன்; ஆங்கிலப் பத்திராதிபர்: திரு. ரீ. சுப்பிரமணியம்; தமிழ்ப் பத்திராதிபர்: திரு. ஸி. நாகராசா. எண்மரைக்கொண்ட ஒருநிர்வாகசபையும் அமைக்கப்பட்டது.

## தேகவியோகம்

### திரு. வே. தம்பையா

ஏழாலை வாசரும் சைவத்திருவாளருமாகிய வே. தம்பையா உபாத்தியாயர் அவர்கள் நிகழும் விகிர்தி வருஷம் தைமாதம் 17-ந் திகதி (30-1-51) செவ்வாய்க்கிழமை தமது 80-ம் வயதில் சிவபதமடைந்தனர். இப் பெரியார் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மாணாக்கர்களில் ஒருவராவர். சில வருஷங்கள் ஏழாலைச் சைவ வித்தியாசாலையிலும், சுன்னாகம் சைவ வித்தியாசாலையிலும் ஆசிரியராக அமர்ந்து கடமை ஆற்றினார்.

இவ்வறிஞர் மலாய் நாட்டிற்குச் சென்று சில வருஷங்கள் தங்கிச் சைவசமய உண்மைகளை அங்கு பரப்பினார். இவரது ஈமக்கடன்கள் செவ்வாய்க்கிழமையன்று இவரின் புதல்வர்களால் நடத்தப்பட்டன. இப் பெரியாரின் ஆன்மா சாந்தியடைவதாக!


அதுவே அவனுடைய கடைசி பாகம் போல் தோன்றியது- ஆனால் இப்பொழுது அவன் ஒரு அபிமான நடிகன்!




Copyright Horlicks Ltd.

HLC. 2271



யாழ்ப்பாணம் - மயிலிட்டி தெற்கு, திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1951-ம் ஆண்டு பெப்ரவரி மீ 11உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.